Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

S.M.கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-9957) T.P: 024-222 4247



# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி -01 | 17-08-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -181

# அருமை கல்விக்கூட ஆண்டுநிறைவு நிகழ்வில் தேசியத் தலைவர் கலந்துகொண்டு சிறப்பிப்பு

அருமை கல்விக்கூட போராளிகளின் அறிவியல் கண்காட்சி மற்றும் ஆண்டு நிறைவு நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். நேற்று இரவு நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்ட தேசியத்தலைவர் அவர்கள் அதிசிறப்பாய், சிறப்பாய் மற்றும் கற்கையை நிறைவு செய்த போராளிகளுக்கும் இப்போராளிகளுக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் இந்நிகழ்வில் அருமை கல்விக்கூடப் போராளிகளால் "முதல் பயணம்", "எங்கள் மனக்கண்களைத் திறவுங்களேன", "அரசியற் புலனாய்வுக் கருத்துக்கள்" ஆகிய மூன்று நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

அருமை கல்விக்கூடப் பொறுப்பாளர் நாவலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதற் பயணம் மற்றும் அரசியற் புலனாய்வுக் கருத்துக்கள் ஆகிய நூல்களை நாவலன் வழங்க தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார். போராளி ஆதித்த நிலா எழுதிய எங்கள் மனக்கண்களைத் திறவுங்களேன் என்ற நூலை போராளி ஆனந்தி வழங்க தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார். இதனையடுத்து நடைபெற்ற நிகழ்வில் மூத்த தளபதி ச.பொட்டு அவர்களின் கருத்துரையை அடுத்து கலைநிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, மூத்த தளபதி கேணல் பால்ராஜ் மற்றும் துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் கலந்து கொண்டனர்.

# தென்னிலங்கை அதிகாரப் போட்டி காரணமாக இனப்பிரச்சினைத் தீர்வு இழுத்தழிக்கப்படக் கூடாது

## அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(அலுவலக செய்தியாளர்)

**தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தங்களுடைய அதிகாரத்தை நிலைப் படுத்துவதற்கும், அதிகாரப் போட்டிகள் காரணமாகவும் தேசிய இனப்பிரச் சினைக்குத் தீர்வுகாண்பது இழுத்தழிக்கப்படக்கூடாது என ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தியுள்ளோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்த ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரித்தானிய நெதர்லாந்துத் தூதுவர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவரது பேட்டியின் விபரம் வருமாறு.

**கேள்வி:-ஐரோப்பிய யு,னிய னுடனான சந்திப்புப் பற்றித் தெரிவிப்பீர்களா?**

பதில்:- ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த தூதுக்குழுவினா சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவது சம்பந்தமான நிலைப்பாட்டை வலியுறுத்தி உள்ளார்கள். நாங்களும் எமது நிலைபபாட்டைத்தெளிவாக விளக்கியுள்ளோம். அவர்களும் அதனைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளுக்கு எதிரான கட்சியினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

## ஜே.வி.பி. அரசிடம் வலியுறுத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான கட்சியினருக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என ஜே. வி. பி கோரியுள்ளது. இந்தப் பாதுகாப்பு யதார்த்த ரீதியில் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் அந்தக் கட்சி கேட்டுள்ளது. நேற்றுக் கொழும்பில் ஈழமக்கள் சனநாயகக் கட்சியின் ஊடக செயலர் கொல்லப்பட்ட சம்பவத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கிறிஸ்தவ மதத்தைப் பாதுகாக்குமாறு கோரி கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவின் அருகில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.கிறிஸ்தவ சகோதரத்துவ அமைப்பு இதனை (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டுப்பற்றாளர் இரத்தினத்திற்கு இன்று கிளிநொச்சியில் அஞ்சலி

நாட்டுப்பற்றாளர் திரு.செ.இரத்தினம் அவர்களுக்கு இன்று கிளிநொச்சியில் இறுதி அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் தனது ஆற்றலை கணிசமானளவு வழங்கி வந்த நாட்டுப்பற்றாளர் திரு. செ.இரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் காலமாகிவிட்டார். மூன்று வாரங்களுக்கு முன் திடீரெனச் சுகவீனமுற்று இவர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு அப்பொலோ மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீவிர சிகிச்சைக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்


நேற்று முன்தினம் சுகவீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்தார். செல்லையா இரத்தினம,(வேலணை மேற்கு புளியங்கூடல் ,யாழ்ப்பாணம்,த.மு. இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்) (12 ஆம் பக்கம் பார்க்க)

# கட்டாய மதமாற்றத்தடைச்சட்டம் அரசியலமைப்புக்கு முரணல்ல

## - உயர்நீதிமன்றம் அறிவிப்பு

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டாய மதமாற்றத்துக்கு எதிரான சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிதிருப்பதாக கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் சபாநாயகருக்கும் சனாதிபதிக்கும் எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இன்று பாராளுமன்றம் கூடும்போது உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தைச் சபாநாயகர் சபையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி முக்கியஸ்தர் பாலநடராஜ ஐயர் கொழும்பில் துப்பாக்கிச் சூட்டில்பலி



(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளரான க.பாலநடராஜ ஐயர் (சின்னபாலா வயது -47) பலியானார்.

காலை 8.30 மணியளவில் டபிள்யு ஏ.சில்வா மாவத்தையில் இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாகனத்தில் ஏறுவதற்காக வீட்டிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த அவர் மீது அப்பகுதியில் காத்திருந்த இனந் தெரியாதோர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு உந்துருளியில் தப்பிச் சென்றுவிட்டதாக பொலிசார் கூறியுள்ளனர். இவர் மீது 6 துப்பாக்கி ரவைகள் பாய்ந் (12 ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது.

மாங்குளத்திற்கும் மல்லாவிக்கும் இடையில் 06.08.04 ஆம் திகதி அன்று சின்னத்தம்பி அழகன் ஆகிய எனது தே.அ.அட்டையும், வங்கி வைப்பு புத்தகமும் தவற விடப்பட்டுள்ளன. இதனைக் கண்டெடுத்தவர்கள் மல்லாவி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (சி.4132)

### காணிவிற்பனைக்கு

யாழ். அரியாலை, கண்டிவீதி நெடுங்குளம் சந்திக்கும் பொன்னம்பலம் சந்திக்கும் இடையில் (ஏ9 வீதிக்கரையில்) 3 பரப்புக்காணி (கிணற்றுடன் கூடியது) விற்பனைக்குண்டு தொடர்பு சு.இரவீந்திரன்-அதிபர் 612/6 இராமநாதபுரம், கிளிநொச்சி, (T.P.071-2373363,0602-213521) (சி.4966)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி,லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டி வீதி, கிளிநொச்சி. T/P.021 2285750 (சி-10064)

### சான்றிதழ் வழங்கல்

NITM.கணினிப் பயிற்சி நிலையத்தில் இதுவரையில் பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்கள் எதிர்வரும் 20/08/04 முன்னர் தமது பெயர் விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும். Derector NITM:-புதுக்குடியிருப்பு

### அமுதன் கல்வி நிலையம்

2005:- DAY CLASSES கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம் 18.08.2004 புதன் காலை 11.00 (செவ்வாய், புதன்) தகவல் நிர்வாகி. (சி.4680)

## கழிவகற்றல் நடைபெறவில்லை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் கழிவுகள் தொடர்ச்சியாக அகற்றப்படாமல் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் விளைவுகள் பாரிய அளவில் ஏற்பட சந்தர்ப்பங்கள் நிறைய உண்டென வர்த்தகர்களும், பொது மக்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

மழைபெய்யுமானால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டு இக்கழிவு கள் மூலம் நுளம்புகள் பெருக்கமடைந்து பாரிய விளைவுகள் ஏற்படும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. (08)

# தென்னிலங்கை சர்வமத சமாதான அமைப்பு சர்.தமிழீழ மாணவர் பேரவையுடன் சந்திப்பு

தேசிய ஐக்கியத்துக்கான சர்வமத சமாதான அமைப்புப் பிரதிநிதிகள் 19 பேர் உள்ளடங்கிய தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த குருமார்/முஸ்லீம் மதத் தலைவர்கள்/இந்து மதகுருமாகள் உள்ளிட்டோர் சமாதானம் தொடர்பாக வடபகுதி மக்களின் கருத்துக்களை அறியும் முகமாக கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்தனர். அவர்கள் நேற்று மாலை 3 மணியளவில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் மாணவ பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன், சர்வதேச மாணவப் பேரவை உறுப்பினர்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செயலாளர் ஆகியோர் பங்குபற்றினர். இந்நிகழ்வில் கருத்துரை வழங்கிய சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைவர் எமது மண்ணில் சமாதானம் ஒன்று ஏற்படவேண்டும் என்றால், முதலில் தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கை கட்டியெழுப்பப்பட வேண்டும் இன்னும் கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சத்துக்கு மேலான மக்கள் யாழ் குடா நாட்டில் மட்டும் தமது சொந்த இடங்களை விட்டு அகதி முகாம்களிலும் நலன்புரிநிலையங்களிலும் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் அவல வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறவிடுமாறு பல போராட்டங்களை நடத்தியும் சிறிலங்கா இராணுவம் அதனை ஒப்படைக்க மறுத்துவிட்டது. எமது மக்கள் இயல்புவாழ்க்கை வாழ வேண்டுமென்றால் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் பேச்சுக்களைத் தொடர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இக்குழுவிற்கு தலைமை தாங்கி வந்த களனிப் பல்கலைக்கழக பீடாதிபதி களுபகனதேரர் கருத்துத் தெரிவிக்கையில் சமாதானம் தொடர்பாக உங்களது அபிப்பிராயங்களைப் பெறவே நாங்கள் இங்கு வந்தோம். உங்களுடய பிரச்சினைகளை தெளிவாக அறிந்துகொண்டுள்ளோம். எங்களால் இப்பிரச்சினைகள் தொடர்பாக உயர்வான நடவடிக்கைகள் எதுவும் எடுக்க முடியாது. ஆனால் உங்களது பிரச்சினைகளை தென்பகுதி மக்களிடம் கூறி அவர்களுக்கு உண்மைத் தன்மையை ஏற்படுத்த முடியும் என்றார். இச்சந்திப்பில் பல்வேறுபட்ட விடயங்களும் ஆராயப்பட்டன.(36)

## சூரிய மின்கலம் விற்பனைக்கு

செல்சோலர் லங்கா லிமிட்டட்டின் முகவராகச் செயற்படும் வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் விலைகளில் சோலர் பெற்றுக் கொள்ளலாம் என்பதைச் சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம். 3 பல்ப் செல்சோலர் கையிருப்புச் சொற்பமே உள்ளதால் உங்கள் தேவைக்கு முந்துங்கள். குறைந்த முதலீட்டுடன் நிரந்தரமாக இருள் நீக்கி ஒளி ஏற்ற இன்றே நாடுங்கள்.

| | | |
|---|---|---|
| 3பல்ப் | உடையது | 19000.00 |
| 4பல்ப் | உடையது | 29000.00 |
| 7பல்ப் | உடையது | 46000.00 |

வவுனியா வடக்குப்.ப.நோ.கூ..சங்கம்
நெடுங்கேணி.

(சி-10077)

## கிளி.மாவட்ட வைத்தியசாலையில் காது,மூக்கு, தொண்டை சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் காது,மூக்கு, தொண்டை நோய்களுக்கான வைத்திய சிகிச்சைகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பெற்று நடைபெற்று வருகின்றன.

மேற்படி நோய்களுக்கான வைத்திய சிகிச்சைகள் கிளி/மாவட்ட வைத்தியசாலையில் ஞாயிறு தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9.00 மணி முதல் 12.30 மணிவரை நடைபெறுமெனவும், மேற்படி சிகிச்சை மேற்கொள்ளும் பொருட்டு வைத்திய கலாநிதி றொபேட் பெஞ்சமின் நியமிக்கப் பெற்றுள்ளாரெனவும், கிளி/மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சிவானந்தன் தெரிவித்துள்ளார்.(சோ.கு)

## பெயர் மாற்றம்

இல.24 கட்சன்வீதி வட்டக்கச்சியில் வசிக்கும் யாதவராயர் இராசராசேஸ்வரி ஆகிய எனது பெயரை 11.08.2004 ஆம் திகதி தொடக்கம் யாதவராயர் இராசாத்தி என பெயர் மாற்றம் செய்துள்ளேன். தகவல் யா.இராசாத்தி. (4968)

## சாவு அறிவித்தல்

### கணேஸ்-மாணிக்கம்



(பூபதி)

யாழ்.நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கிளி/ஜெயந்திநகர் இல:45ஜ நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கணேஸ்-மாணிக்கம் (பூபதி) அவர்கள் 16.08.2004 நேற்று காலமானார். இவர் காலம் சென்ற முருகேசு கணேஸ் அவர்களின் அன்பு மனைவியும்; காலஞ்சென்ற சிற்றம்பலம்-இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும்; முருகேசு-சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும்; யோகலட்சுமி, கைலாசபதி, முத்துலிங்கம் (அம்மன் அருள் மரக்காலை கனகபுரம்), சரஸ்வதி (செல்வாநகர்), துரைலிங்கம் (றியோசவுண்ட் சேவிஸ் உதயநகர்), கனகலிங்கம் (வவுனியா), சந்திரவதி (அம்பாள் குளம்), காலஞ்சென்ற விசுவலிங்கம், கற்பகவதி, சசி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்; குணரட்ணம், விசாலாட்சி (கனடா) காலஞ்சென்ற தர்மலிங்கம் (கல்மடு), செல்லம்மா (திருநகர்), தில்லைநாதன் (கச்சேரி செயலக சாரதி), காலஞ்சென்ற திருநாவுக்கரசு (கப்பல் துறைமுக ஊழியர் நயினாதீவு), காலஞ்சென்ற நித்தியலட்சுமி (D/8 உருத்திரபுரம்), நீலகண்டன் (D.D.J. சாரதி D/8 உருத்திரபுரம்), யோகநாதன் (கொழும்பு), ஞானதேவி (D/8 உருத்திரபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்; காலஞ்சென்ற சிவக்கொழுந்து (நயினாதீவு), காலஞ்சென்ற கோபாலபிள்ளை (கொட்டடி யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற நாகரட்ணம் (ஆசிரியை, கொக்குவில். இந்து) ராசமணி (லண்டன்), காலஞ்சென்ற சின்னராசா (புகையிரத ஊழியர், நயினாதீவு), சண்முகராசா (நயினாதீவு) ஆகியோரின் அன்பு மைத்துனியும்; செல்லத்துரை (நெக்ரோ கிறீம் கவுஸ், வவுனியா), கதிரவேலு (வர்த்தகர் கிளிநொச்சி), சிவபாலன் (கயானி கிறீம் கவுஸ், குருமன் காடு, வவுனியா), சிவதேவா (யு.என்.எச்.சி.ஆர், கிளிநொச்சி), கேதாரலிங்கம் (கனடா), விஜயலட்சுமி, திருலோகநாயகி, அமுதவல்லி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் உதயநகர் கிழக்கு, 257-முத்துமாரி அம்மன் வீதியிலுள்ள றியோ சவுண்ட் சேவிஸ் உரிமையாளரும், வர்த்தகருமான துரைலிங்கம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் 17.08.2004 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக ஆனந்த நகர் இந்து பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்

(4969)

## தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்

### கிளிநொச்சி

**கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்.**

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்,வன்னி மாணவர்களின் நன்மை கருதிப் பின்வரும் கற்கை நெறிகளுக்கு புதிய மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கற்கை நெறிகள்**

01. மரவேலை தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நெறி.
02. கட்டுமான தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நெறி
03. மின்னொட்டு தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நெறி.
04. அலுமினியம் பொருத்துதல் பயிற்சி நெறி.
05. முச்சக்கர வண்டி (ஆட்டோ) திருத்துதல் பயிற்சி நெறி.
06. தொலைக்காட்சி, வானொலி திருத்துதல் பயிற்சி நெறி.
07. வீட்டு மின் இணைப்பு திருத்துதல் பயிற்சி நெறி.
08. உழவு இயந்திரம் திருத்துதல் பயிற்சி நெறி.

**கல்வித் தகைமை**

6ஆம் வகுப்பிற்கு மேல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.


**ஊக்குவிப்பு**

இல. 1,2,3,4, ஆகிய பயிற்சி நெறிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை, பிரயாண ஒழுங்கு என்பன செய்து கொடுக்கப்படும்.

மேற்படி பயிற்சி நெறிகளை கற்க ஆர்வமுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை எதிர் வரும் 30.08.2004 இற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடிய வகையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்

அதிபர்
தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்
கிளிநொச்சி.

(சி.10076)





மொஸ்ராடா அல்சதாரின் படையணிப் போராளிகள் நஜாப் நகரின் வீதியொன்றில் காவல் காத்து நிற்கின்றனர். நஜாப் நகரின் மற்றொரு வீதியில் அமெரிக்க இராணுவ வாகனங்கள் ரோந்தில் ஈடுபட்டுள்ளன.

# பத்துப்பேரை ஏற்றிச் சென்ற மலேசிய உலங்குவானூர்தியைக் காணவில்லை

மலேசிய விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று காணாமற்போயுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

10 பேரை ஏற்றிச்சென்ற உலங்கு வானூர்தி மலைக்காடுகள் நிறைந்த மலைப்பிரதேசத்தில் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காணாமற் போன உலங்கு வானூர்தியைத் தேடும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக மலேசிய பாதுகாப்பு அமைச்சர் நஜீப்ரஸாக் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசிய . எல்லைப் பகுதியில் உள்ள இராணுவத்தினருக்கான விநியோகத்தில் ஈடுபட்டிருந்த உலங்குவானூர்தியே காணாமற்போயிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.காணாமற்போன உலங்கு வானூர்தி சீரற்ற கால நிலை காரணமாகஅவசர தரையிறக்கம் செய்யப்பட்டுள்ளதா? அல்லது ஏதாவது விபத்து சம்பவித்துள்ளதா? என்பது குறித்து இது வரை தகவல் எதுவும் வெளியாக வில்லை.

# தென்கொரிய சனாதிபதிக்கு எதிராக தலைநகர் சியோலில் ஆர்ப்பாட்டம்

ஈராக்கிற்கு தனது படைகளை அனுப்பிவரும் தென்கொரிய சனாதிபதிக்கெதிராக தலைநகர் சியோலில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட கலவரத்தில் முடிவடைந்துள்ளது.

ஈராக்கில் அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றில் சுமார் 700 தென் கொரிய இராணுவத்தினர் மருத்துவ மற்றும் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் மேலும் படைகளை அனுப்பி வைக்க தென் கொரிய அதிபர் முடிவெடுத்துள்ளார். இதன் காரணமாக கடும் எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் சியோலில் சுமார் பத்தாயிரம் பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. ஆர்ப்பாட்டக் காரர்களை விரட்டியடித்த பொலிசார் துப்பாக்கிச் சூட்டினை நடத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிசார் மீது கற்களையும் போத்தல் களையும் வீசி தாக்கினார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சூடானில் ஆபிரிக்க கறுப்பு இன மக்களுக்கு பாதுகாப்பில்லையென ஐ.நா. பிரதிநிதி குற்றச்சாட்டு

**(வோஷிங்டன்)**

**சூடானில் டார்பன் பகுதியில் அரபுத்தீவிரவாதிகளைச் சூடான் அரசு நிராயுதபாணிகளாக்கவில்லை என்றும். அங்கு வாழும் ஆபிரிக்கக் கறுப்பு இன மக்களுக்கு எவ்வித பாதுகாப்பையும் அளிக்கவில்லை என்றும், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபிஅனானின் விசேட பிரதிநிதி குற்றஞ் சாட்டியுள்ளார்.**

அவர் நியூயோர்க்கில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டார்பன் பிரதேசத்தில் பாதுகாப்பு நிலைமை அபிவிருத்தி செய்யப்படாவிட்டால் சூடான் மீது பொருளாதாரத் தடை கொண்டு வரப்படுமென ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை விடுத்த கால எல்லைக்கு இரண்டு வாரத்திற்கு முன்னர் அவர் இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

இதனிடையே சூடானின் வெளிவிவகார அமைச்சர் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையில் டார்பன் பிரதேசத்தில் மூன்று மாகாணங்கள் பாதுகாப்பான பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. இவ்விடங்களில் எவ்வித தயக்கமுமின்றி கறுப்பு ஆபிரிக்க மக்கள் தங்கியிருக்கலாமென அறிவித்துள்ளார். அத்துடன் இம் மூன்று இடங்களையும் நிர்வகிப்பதற்கென விசேட கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களெனவும் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலியர் நடத்திய தாக்குதலில் பலஸ்தீன வீரர் ஒருவர் பலி

(காசா)

காசாமுனையில் நேற்றுக்காலை இஸ்ரேலிய உலங்குவானூர்தி மேற்கொண்ட தாக்குதலில் பலஸ்தீன வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவர்கள் இஸ்ரேலிய எல்லைப்புறத்தில் உள்ள மயானம் ஒன்றில் கூடியிருந்து இஸ்ரேலிய நகரத்தின் மீது ஏவுகணைத் தாக்குதலை நடாத்துவதற்கு முயற்சி மேற்கொண்டிருந்தார்களென இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

# மூன்று இந்தியர்கள் உட்பட ஏழு பேரின் விடுதலை; சமரச முயற்சியிலிருந்து குவைத் பின்வாங்குகிறது?

ஈராக்கில் தீவிரவாதிகளினால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 3 இந்தியர்கள் உள்ளிட்ட 7 பேரை விடுவிப்பது தொடர்பான சமரச முயற்சிகளில் ஈடுபடுவதற்காக புதிய தூதுவர் நியமிக்கப்பட்டதாக வெளியான தகவலை குவைத் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் மறுத்துள்ளார்.

இதன் காரணமாகக் கடத்தல் காரர்களிடம் 26 நாட்களாக சிக்கியிருக்கும் பிணைக் கைதிகளை விடுவிப்பதில் தொடர்ந்தும் கடுஞ் சிக்கல்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

ஆயினும் பிணைக் கைதிகளை விடுவிக்கும் முயற்சியினைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக மத்தியரசு தெரிவித்துள்ளது.

இதற்காக அமைக்கப்பட்டுள்ள நெருக்கடி நிர்வாகக் குழுவினர் நேற்று முன்தினம் வெளியுறவு இணையமைச்சர் அகமது தலைமையில் கூடி, சுமார் 2 மணி நேரம் ஆலோசனை நடத்தியுள்ளனர். இதனிடையே பிணைக்கைதிகளில் ஒருவரான அந்தர்யாமியின் தந்தை தனது மகன் உள்ளிட்டவர்களை விடுதலை செய்யுமாறு கடத்தற்காரர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஈராக்கின் நஜாப் நகரின் தெற்கே மோதலையடுத்து எரியும் சந்தைப்பகுதி



"சாலி" சூறாவளியினால் பாதிக்கப்பட்ட புளோரிடா மாநிலத்தின் "புன்றாகோடா" குடியிருப்பாளர்களுடன் அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் தனது சகோதரரான ஆளுநர் ஜெப்புஷ் சகிதம் உரையாடுகின்றார்.

# தேர்தல் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்

## சோனியாகாந்தி உறுதி

தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம். இதை மீண்டும் நினைவு படுத்தி, உறுதி எடுத்துக் கொள்ளும் நாள்தான் சுதந்திர தினம் என்று காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவருமான சோனியா காந்தி கூறியுள்ளார். பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அமைச்சர்கள் முன்னிலையில் டில்லியில் அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைமை அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை தேசியக் கொடியை ஏற்றி வைத்தார் சோனியா. சுதந்திரப் போராட்டத் தியாகிகள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் செயல்களை இந்நிகழ்ச்சியின் போது வெகுவாகப் புகழ்ந்தார். வீரத் தியாகிகளை நினைக்க வேண்டிய நாள் இது, இந்நாளில் எல்லைகளில் ஆயுதங்களை ஏந்தி நாட்டுக்காகக் காவல் காக்கும் வீரர்களையும் நினைத்துப்பார்க்க வேண்டும். நாட்டு மக்களுக்கு எனது மகிழ்ச்சி கலந்த சுதந்திரதின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார் இவர். மன்மோகன்சிங்கிற்காக 5 நிமிடங்கள் காத்திருந்த சோனியா அவர் வந்ததும் கொடியேற்றினார். இந் நிகழ்ச்சி முடிந்ததும் நிருபர்களிடம் சோனியா பேசினார். ஆயினும் மன்மோகன் சிங் நிருபர்களிடம் பேசவில்லை.

# தேசியக்கொடியை அவமதித்ததாக வெங்கையா நாயுடுவிற்கெதிராகப் புகார்

தேசியக்கொடியை அவமதித்ததாக பாரதிய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு மீது சென்னை காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள பாரதிய ஜனதா கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் சுதந்திர தினவிழா கொண் டாடப்பட்டது. இதன் போது இந்நிகழ்வில் கலந்துகொண்ட வெங்கையாநாயுடு தேசியக் கொடியினை ஏற்றினார். . ஆனால் கொடியினை ஏற்றிய போது கொடிக்கம்பத்தின் உச்சியில் தேர்தல் சின்னமான தாமரைச் சின்னம் பொருத்தப்பட்டிருந்தது. இச்செயல் தேசியக் கொடியினை அவமதிக்கும் செயல் என்று காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த பரணிதரனும் சந்திரபோஸ் என்பவரும் புகார் செய்துள்ளனர். இதன்போது தேசியக்கொடியை அவமதித்த வெங்கையா நாயுடு மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அவர்கள் புகார் செய்துள்ளனர்.



அமைதியற்ற தாய்லாந்தின் தென்பகுதியில் இரண்டு சீனர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து பிக்-அப் வாகனம் ஒன்றினைப் பரிசோதிக்கும் தாய்லாந்துப் படையினர்.

# டோசருக்குள் நசியுண்டு சிறுவன் பரிதாப மரணம்

வவுனியா-சுதந்திரபுரம் பகுதியில் டோசருக்குள் நசியுண்டு சிறுவன் ஒருவன் பரிதாபமாக மரணமானார் 12 வயதான கிரிகரன் என்பவர் டோசர் வேலை செய்துகொண்டு இருந்தபோது அதற்குப் பின்னால் விளையாடியதாகவும் அவ்வேளை திடீரென்று டோசருக்குள் நசியுண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஞாயிறு பிற்பகல் 1.30 மணியவில் இச்சம்பவம் இடம்பெற்றது. (21)

# 3 நாட்களாக காணாமற்போன பெண் சடலமாக மீட்பு

(செட்டிகுளம்)

மூன்று நாட்களாகக் காணாமல் போயிருந்த பெண் வவுனியா வில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 30 வயதான இந்திரகௌரி என்ற பெண் மூன்று நாட்களுக்கு முன்னர் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது. வன்னி இராணுவ தலைமையகத்திற்கு அருகிலுள்ள மூன்று முறிப்பு சமணங்குளம் வீதியின் பற்றைக்குள் இருந்து இந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது சடலத்தின் அருகில் கிருமிநாசினியின் வெற்றுப் போத்தல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும் இது கொலையா அல்லது தற்கொலையா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. (21)


# இராணுவ வெடிபொருளுடன் விளையாட்டு சிறுவன், வீதியால்சென்ற வயோதிபர்காயம்!

(அலுவலகசெய்தியாளர்)

இராணுவத்தால் கைவிட்டுச் செல்லப்பட்ட வெடி பொருள் ஒன்றை எடுத்து எறிந்தபொழுது அப்பொருள் வெடித்ததில் வீதியால் சென்ற வயோதிபரும், எறிந்த சிறுவனும் காயமடைந்த நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி திருநகர் மயானத்திற்கு அருகாமையிலுள்ள குடியிருப்புக் காணியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை வவுனியாவிலிருந்து தனது உறவினர் வீட்டிற்கு வந்திருந்த மேற்படி சிறுவன் காணியில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த வெடி பொருளினை எடுத்து வீசிய பொழுது அவ்வெடி பொருள் மரத்தில் பட்டு வெடித்துச் சிதறியதுஇதில் சிறுவனும், அதேசமயம் வீதியால் சென்ற வயோதிபரும் காயங்களுக்குள்ளானதாகத் தெரியவந்துள்ளது. ஞா.அஜித் (வயது 8) என்ற சிறுவனும் மாணிக்கம்



(வயது 62) என்ற வயோதிபருமே மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர். (சோ.கு)

# தொழிலாளியின் வாய்க்குள் பேப்பரைத்திணித்து முகமாலையில் படையினர் வெறியாட்டம்!

## -அடாவடித்தனங்களும் அதிகரிப்பு

(நமதுசெய்தியாளர்)

**முகமாலையில் சிறிலங்காப் படையினரின் அடாவடித்தனங்கள் அண்மைய நாட்களாக அதிகரித்துக் காணப்படுவதாக தெரிய வருகிறது. கடந்த சனிக்கிழமை படையினர் இளைஞர்ஒருவரின் வாய்க்குள் பேப்பரைத் திணித்து கொடுமைப்படுத்தியுள்ளதோடு, சோதனை என்றபெயரில் கெடுபிடிகளும் இடம்பெற்று வருகின்றன.**

முகமாலை சிறிலங்காப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பார வூர்திகளின் சுமை இறக்கும் பகுதியில் தொழிலாளியாய் பணியாற்றி வரும் சிறிகாந் (வயது 26) என்பவரின் வாய்க்குள் பேப்பரை வலுக்கட்டாயமாகத் திணித்து அரை மணித்தியாலத்துக்கு மேலாக படையினர் பாரவூர்திக்குள்ளே இருக்க வைத்து அட்டூழியம் புரிந்துள்ளனர்.

அத்துடன் இக்கொடூர செயலைப் பார்த்து சிறிலங்காப் படையினர் சிரித்து மகிழ்ந்துள்ளதாகத் தெரியவருகிறது. தான் தன்னுடைய சக ஏழு பணியாளர்களுடன் பொருட்களை ஏற்றிஇறக்கிய பின்னர் அந்த இடத்திற்கு வந்த சிறிலங்காப் படையினர் இருவர் சுமை இறக்கிய தொழிலாளியான சிறிகாந் என்பவரைப் பார்த்து ஆமி ஆக்களால் பெரிய கரைச் சல் என்று சிங்களத்தில் கூற, சிங்களம் தெரியாத இத்தொழிலாளி புரியாமல் தலையை அசைக்க, உடனே அருகில் நின்ற இன்னொரு சிறிலங்காப் படை அதிகாரியுடன் ஆமி ஆக்கள் பெரிய கரைச்சல் என்று சொல்கின்றான்; இவனுக்குப் பனிஸ்மன் கொடுக்க வேண்டும் எனக்கூறி வாய்க்குள் பேப்பரைத் திணித்துப் படையினர் அட்டூழியம் புரிந்துள்ளனர். இச்சம்பவம் சனிக்கிழமை மதியம் இடம் பெற்றதாகத் தெரியவருகின்றது. இதற்கு மத்தியில் நேற்று முன் தினம் சேரன் நிறுவனத்திற்குச் சொந்தமான சீனி ஏற்றிவந்த பார வூர்திஒன்றுபடையினரின் சோதனை என்ற பெயரில் முப்பதுக் கும் மேற்பட்டபடையினர் கெடுபிடி களைமேற்கொண்டுள்ளனர். (28)

# கோணாவிலில் வீடு எரிந்து சாம்பரானது

(அலுவலக செய்தியாளர்)

கடந்த வெள்ளியன்று கோணாவில் கிராமத்தில் வீடு ஒன்று முற்றாக எரிந்துபோயுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற நேரம் வீட்டில் பெரியோர்கள் இல்லாது சிறு பிள்ளைகளே இருந்துள்ளனர். அப்போது வீட்டின் சமையலறைப் பகுதிக்குள் அடுப்பிலிருந்த நெருப்பு காற்றினால் வாரி எடுக்கப்பட்டு ஓலைக்கூரையில் வீசப்பட்ட போதே வீடு தீப்பற்றியது. உடனடியாகத் தீயை அணைப்பதற்கு யாரும் இலலாத காரணத்தால் வீடு முற்றாக எரிந்ததுடன் வீட்டிலுள்ள சகல பொருட்களும், உடமைகளும் சாம்பலாகியுள்ளன. பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளியே ஓடியதால் தப்பியுள்ளனர்.கோணாவில் கிராமத்தைச் சேர்ந்த கி.இராசையா என்பவரின் வீடே எரியுண்டுள்ளது.இக்குடும்ப பத்திற்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்ய விரும்பு பவர்கள் உதவி வழங்குமாறு வேண்டப் படுகின்றனர். (கு.தீ)

# விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் வட்டக்கச்சியில் நடவடிக்கை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கிளிநொச்சி விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் தமது துரித நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

வியாபார நிலையங்களில் விலைப் பட்டியல் போடப்படல் வேண்டும் விலைப்பட்டியலில் இடப்பட்ட விலையினையே விற்கவேண்டும். மற்றும் வெதுப்பிகள் எடைகுறைவாகக் காணப்படுவதால் 1இறாத்தல் பாண் 350 கிராம் ஆக இருத்தல் வேண்டும். முக்கியமாக குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மா அட்டையில் இடப பட்ட விலையினையே விற்றல் வேண்டும். மற்றும் பழுதடைந்த உணவுப்பொருட்கள் விற்கப் படுவதற்கு எதிராகவும் தகுந்த நட வடிக்கை எடுக்கப்பட்டும் வருகின்றது குறிப்பிடத்தக்கது.(12)

# வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தை மீளக் கட்டியெழுப்ப ஆலோசனை

(செட்டிகுளம்)

வவுனியா வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. வவுனியா முத்தையா மண்டபத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வு வவுனியா நகர பொறுப்பாளர் தர்மேந்திரா தலைமையில் இடம்பெற்றது.

தற்போது இருக்கும் அங்கத்தவர்களைக் கொண்டு இந்த அமைப்பைத் தொடர்ந்தும் இயக்குவது என்றும் பொது அமைப்புக்களில் அங்கத்தவர்களைக் குறைப்பது என்றும், யாப்பு ஒன்று தயாரிப்பது என்றும் நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு மாற்று வழிகளைக் கையாள்வது என்றும், முடிவுகள் காணப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.ஞான வேல் மற்றும் அலை ஆகியோரும் கலந்துகொண்டனர். (21)

# மிதிவெடிகள் அகற்றல்

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தால் புதைக்கப்பட்ட வெடிபொருட்களை எவ்.எஸ்.டி நிறுவனம் அகற்றிவருகின்றது. தற்போது வவுனியா செங்கட்படைப் பகுதியில் 592 சதுரமீற்றர் பகுதியில் 42 பிபோர் மார் என்ற பாகிஸ்தான் நாட்டின் தயாரிப்பான மிதிவெடிகளை தாம்அகற்றி இருப்பதாக எவ்.எஸ்.டி நிறுவனம் தெரிவிக்கின்றது. வவுனியாவில் இராணுவ நடவடிக்கையின் போது புதைக்கப்பட்ட வெடிபொருட்களை ஆறு நிறுவனங்கள் அகற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (21)



துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவில் துணுக்காயிலிருந்து அம்பலப்பெருமாள் பிரதான வீதி குன்றும் குழியுமாக இருந்து வருவதால் பிரயாணங்களை மேற்கொள்ள முடியாமல் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இவ்வீதியில் பயணிக்கும் ஒருவரின் அவலத்தை படத்தில் காண்க... (படம் அன்ரனி)

# புதிய திடீர் மரண விசாரணை அதிகாரிபிரிவுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாக்கம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய திடீர் மரண விசாரணை அதிகாரி பிரிவுகள் ஆறு அமைக்கப் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் கருத் துத் தெரிவிக்கையில், மக்களின் நலன் கருதி மேற்படி மரணவிசாரணை அதிகாரி பிரிவுகள் கிளி.மாவட்டத்தில் விரிவு படுத்தப் பெற்றுள்ளதெனவும் இதன் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி கண்டாவளை, பச்சி லைப்பள்ளி, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் முன்னர் இருந்த இரண்டு திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு பதிலாக ஐந்து மரணவிசாரணை அதிகாரி பிரிவுகள் அமைக்கப்பெற்றுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவில் மூன்று மரண விசாரணை அதிகாரியும் கண்டா வளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒரு மரண விசாரணை அதிகாரியும், பச்சிலைப்பள்ளி அரசாங்க அதிபர் பிரிவில் ஒரு மரண விசாரணை அதிகாரியும், மற்றும் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பூநகரி,(செட்டிய குறிச்சி) பொன்னாவெளி, பல்லவ்ராயன்கட்டு பிரிவுகள் அவ்வாறே தொடர்ந்து இயங்குமெனவும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி உ.அ.அ.பிரிவுகளில் உள்ள கிராம சேவை அலுவலர் பிரிவுகளை உள்ளிட்ட மரணவிசாரணை அதிகாரிகளின் பிரிவும் கி.சே.அலுவலர் பிரிவுகளும் பின்வருமாறு.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம் கி.சே.அலுவலர் பிரிவுகளுக்கு அக்கராயன்குளம் மரணவிசாரணை அதிகாரியும், வட்டக்கச்சி, சிவிக்சென்ரர், மாயவனூர், இராமநாதபுரம், மாவடிஅம்மன் கி.சே.அலுவலர் பிரிவுகளுக்கு கரைச்சி கிழக்கு மரணவிசாரணை அதிகாரியும்; கோணாவில், பொன்நகர், பாரதிபுரம், மலையாளபுரம், விவேகானந்தநகர், கிருஸ்ணபுரம், உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு, அம்பாள்குளம், செல்வாநகர், ஆனந்தபுரம், தொண்டமான்நகர், கனகாம்பிகைக்குளம், அம்பாள் நகர், திருவையாறு, திருவையாறு மேற்கு, இரத்தினபுரம், கிளிநொச்சி நகரம், மருதநகர், பன்னங்கண்டி, கனகபுரம், திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, கணேசபுரம், ஜெயந்திநகர், பெரியபரந்தன், உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம் கி.சே.அலுவலர் பிரிவுகளுக்கு கரைச்சி தெற்கு மரண விசாரணை அதிகாரியும்;

குமரபுரம், பரந்தன்நகர், உமையாள்புரம், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, கோரக்கன்கட்டு, ஊரியான், முரசுமோட்டை, கண்டாவளை, பெரியகுளம், கல்மடுநகர், தர்மபுரம் மேற்கு தர்மபுரம் கிழக்கு, புளியம்பொக்கணை, புதிய புன்னை நீராவி, பிரமந்தனாறு. ஆகிய கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கி.சே.அலுவலர் பிரிவுகளுக்கு கரைச்சி வடக்கு மரண விசாரணை அதிகாரியும்;

கோவில்வயல், இயக்கச்சி, முகா வில், மாசார், சோறன்பற்று, தர்மக் கேணி, புலோப்பளை கிழக்கு, முல்லையடி, தம்பகாமம், பளை நகரம், புலோப்பளை மேற்கு, அல் லிப்பளை, கச்சார்வெளி, அரசர் கேணி, இத்தாவில், முகமாலை, வேம்பொடுகேணி, கிளாலி ஆகிய பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கி.சே. அலுவலர் பிரிவுகளுக்கு பச்சிலைப்பள்ளி மரணவிசாரணை அதிகாரியும் நியமிக்கப் பெற்றுள்ளதுடன்.

பூநகரி பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருக்கும் பொன்னாவெளி, பல்லவராயன்கட்டு, பூநகரி (செட்டியகுறிச்சி) பிரிவுகள் அவ்வாறே தொடர்ந்து இயங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.(சோ.கு)

# தென்மராட்சி உசனில் பல பகுதிகளில் நிலைகளைப் பலப்படுத்தும் படையினர்

(தென்மராட்சி)

**உசன் பகுதிகளில் இராணுவ முன்னரங்க நிலைகள் மற்றும் பதுங்கு குழிகளைப் பலப்படுத்தும் முயற்சிகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் இப்பகுதியில் படையினர் பயிற்சி நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.**

இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் கடந்த ஒன்பதாம் திகதி மீளக்குடியமரக் கோரி நடத்திய போராட்டத்திற்குப் பின்பே இப்பகுதியில் இராணுவத்தின் பலப்படுத்தும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது. அத்துடன் இராணுவப் புலனாய்வாளர்களின் நடமாட்டம் முன்பைக் காட்டிலும் அதிகரித்துள்ளதாகவும் தெரியவருகிறது. இதற்கு மத்தியில் கடந்த வியாழக்கிழமை இரவு 9.00 மணியில் இருந்து 11.00மணிவரை பயிற்சி என்ற போர்வையில் இப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினர் வேட்டுக்களைத் தீர்த்தும் குண்டுகளை வெடிக்கவைத்தும் அச்சுறுத்தும் பாணியில் செயற்பட்டு வருகின்றனர். எழுதுமட்டுவாள் வடக்கு கரம்பகம், உசன், விடத்தல்பளை, கெற்பலி போன்ற இடங்களிலேயே படையினர் இவ்வாறு நடந்துகொள்கின்றனர். (28)

# பெண்களை கிண்டல் செய்த இளைஞரை தட்டிக் கேட்டவர் பலமாகத் தாக்கப்பட்டார்

(தென்மராட்சி)

வரணியில் வீதியால் செல்லும் பெண்களைக் கிண்டல் செய்த இளைஞர்களைத் தட்டிக் கேட்ட நபர் அந்த இளைஞர்களால் பலமாகத் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது வரணிச் சந்திக்கு அருகில் உள்ள கரம்பன் கோயிலடி மதகில் இருந்து தினமும் இப்பகுதியில் பாடசாலை செல்லும் மாணவிகளையும், பெண்களையும் சிலகுறிப்பிட்ட இளைஞர்கள் தினமும பாட்டுப்பாடி கல்லெறிந்து சேட்டை விடுவதாகத் தெரிய வருகிறது கடந்த சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இப்பாதையூடாகச் சென்று கொண்டிருந்த பெண்களை ஆபாச வார்த்தைகளால் பாட்டுப் பாடி சேட்டை புரிந்து கொண்டிருந்த இளைஞர்களைத் தட்டிக்கேட்ட சி.மகேந்திரன் என்பவர் இந்த இளைஞர்களின் அடிக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

இது குறித்துக் கொடிகாமம் அரசியல் துறையிடம் முறைப்பாடு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட இரு இளைஞர்களும் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இது குறித்துக் கருத்துத்தெரிவித்துள்ள கொடிகாமம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.ரத்தினம் அவர்கள் தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளில் உள்ள கல்வி நிலையங்களுக்கு அருகிலும் சந்திகளிலும் மாலை நேரங்களில் கூடும் இளைஞர்கள் பொது அமைதிக்கும் சமுதாய நீரோட்டத்துக்கும் சில தவறான சமிஞ்ஞைகள தருவதாகவும் இது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் இளைஞர்கள் தேசியத்தின் பொறுப்பறிந்து சமூகத்துக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் காரியங்களில் ஈடுபடவேண்டும் என்றும் இனி இதுபோல் சந்திகளில் நின்று கொண்டு பெண்கள் மீது சேட்டைகள் புரிவோர் மீதும் பாரபட்சமற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (28)

# கல்வயல், கற்குழி பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

கல்வயல், மற்றும் கற்குழிப்பகுதிகளில், சமீபகாலமாக பூட்டிய வீடுகளை உடைத்துக் கொள்ளையடித்தல் தனியாக இருக்கும் பெண்களை ஏமாற்றி நகை, பணம் அபகரித்தல் போன்ற சம்பவங்கள் கடந்த ஒரு மாதத்துக்குள் எட்டுக்கு மேற்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது. எனவே மக்கள் விழிப்புடன் இருந்து திருட்டு நடவடிக்கைகளை தடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (28)

# கிராம மட்ட அமைப்புக்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள கிராமமட்ட அமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை போரூட் மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் ஆகியன இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

அந்த அடிப்படையில் யாழ். குடாநாட்டில் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கான நிதி உதவி உட்பட பல்வேறு விதமான உதவிகளையும் வழங்கிவருகின்றன.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யழ். குடாநாட்டின் பின்தங்கிய பிரதேசங்களில் சமூக மேம்படுத்தலை இலக்காக் கொண்டே இவ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (33)

# ஹக்கீமின் வருகையை எதிர்த்து ஓட்டமாவடியில் ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கல்குடாத் தொகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்வதற்கு அங்குள்ள முஸ்லிம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஓட்டமாவடி நகரம் உட்பட பெரும்பாலான முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்ட நிலையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால், இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்குடாத் தொகுதியில் முஸ்லிம்களின் சம்மேளனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. ரவூப் ஹக்கீம் தன்னிச்சையான போக்கினைக் கொண்டிருப்பதால் தலைமைப் பதவியில் இருந்து அவர் விலக வேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. காலை 9.00 மணிக்கு விஜயம் செய்யவிருந்த ரவூப் ஹக்கீம் சுமார் 4 மணித்தியாலங்கள் தாமதித்துக் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கல்குடாத் தொகுதிக்கு விஜயம் செய்ததுடன் ஆதரவாளர்களினால் ஓட்டமாவடி, நீராவோடை, வாழைச்சேனை போன்ற பகுதிகளுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்வதற்கு பொலிசாரும், படையினரும் கடும் பாதுகாப்பு வழங்கி இருந்தனர்.

# கிராம உத்தியோகத்தரின் ஆற்றலை மேம்படுத்த பயிற்சிக் கருத்தரங்கு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதிகளில் பணியாற்றிவரும் கிராம மட்ட உத்தி யோகத்தர்களின் ஆற்றலை மேம்படுத்தவும் அதற்கான ஆலோசனைகளை வழங்கவும் யு.என்.எச்.சி.ஆர். முன்வந்துள்ளது. இதற்கமைய கிராம உத்தியோகத்தர்கள் சமூகசேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் போன்ற உத்தியோகத்தர்களுக்கே இரண்டு நாள் பயிற்சி நெறிக் கருத்தரங்குகள் இடம்பெற இருக்கின்றன. இன்று கொடிகாமம் பிரதேச சபை புதிய மண்டபத்திலும் 24.08.2004 சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும் இக்கருத்தரங்குகள் இடம் பெற இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# தே.எ.பேரவையின் ஊரகக் கிளைகள் தென்மராட்சியில் புனரமைப்பு

தென்மராட்சி பகுதிகளில் தொடர்ந்து தேசிய எழுச்சிப்பேரவையின் ஊரகக்கிளைகள் புனரமைக்கும் பணிகளில் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர்கள் ஈடுபட்டுள்ளனர். கைதடி நாவற்குழி பிரதேசத்தின் கோயிலாகண்டி ஊரகக்கிளை மீளமைப்பு கோயிலாக்கண்டி பாடசாலையில் இப்பகுதிக்கான கிராம அலுவலர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் தென்மராட்சி இணைப்பாளர் இ.கந்தசாமி, கைதடி பகுதி அரசியல் துறைப் பொறுப்பாளர் முரளி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். (28)

## மீளாய்வு

யாழ்.எழுதுமட்டுவாள் வடக்கு மற்றும் தெற்கு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களது உணவு முத்திரைகள் எதிர்வரும் 18ஆம் திகதி சாவகச்சேரியில் உள்ள தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வைத்து மீளாய்வு செய்யப்படவுள்ளது. இதில அனைவரும் தமது உணவு முத்திரைகளை மீளாய்வு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# ஒரு தொகுதி கடற்றொழில் உபகரணங்கள் நிக்கொட் நிறுவனத்தால் மீனவருக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களது நலனைக் கவனத்திற் கொண்டு நிகொட் நிறுவனத்தால் ஒரு தொகுதி கடற்றொழில் உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் வெளி இணைப்பு இயந்திரங்களும் 20 கண்ணாடி, 23 கட்டுமரங்களும், அணமையில் நிகொட் நிறுவனத்தினரால் கடற்றொழில் திணைக்களத்தினூடாக கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த கால யுத்த அனர்த்தம் மற்றும் இடப் பெயர்வுகள் என்பவறறால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களது தொழில் மேம்பாடு மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றை மையமாகக் கொண்டே இக் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.(33)

# பி. செயலர்களுக்கான முக்கிய கூட்டம் இன்று

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று இன்று யாழ். செயலகத்தில் இடம் பெறவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேசசெயலகங்களூடாக மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு வேலைத்திட்டங்கள், எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன குறித்து இதன் போது ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (33)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் நடத்தப்படும் கைப்பணி தொழில் பயிற்சி நெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பெண்களின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார மேமபடுத்தலுக்கான உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கும் நோக்குடன் இடம் பெறவுள்ள கைப்பணிப் பொருட்களை வடிவமைக்கும் இப்பயிற்சி நெறிக்கு ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 30ஆம்திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# காணாமல் போனவரது குடும்பங்களின் புனர்வாழ்வுக்கு த.தே.கூட்டமைப்பு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனவர்களது குடும்பங்களுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களினது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படவுள்ளன இது குறித்து கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், கடந்த காலங்களில் படையினரால் கைது செய்யப்பட்டுக்காணாமல் போனோர் அதிகம் குடும்பத் தலைவர்களாகவும், உழைக்கும் வயதுடையவர்களாகவும் காணப்படுவதால் இவர்களது இழப்பானது அவர்கள் சார்ந்த குடும்பங்களினது பொருளாதார நிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இவ்வாறாக பாதிக்கப்பட்டுள்ளோரது குடும்பங்களை கல்வி சமூக பெருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து பத்து லட்சம் நிதியினை ஒதுக்கியிருப்பதாகத் தெரிவித்தார். (33)

# முன்னாள் ஆணையாளர் விஜயரணசிங்கவை 25 ஆம் திகதி வரை கைது செய்யக் கூடாது

## - மேல்முறையீட்டு நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

ஆட்பதிவு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் விஜயரணசிங்கவை எதிர்வரும் 25ஆம் திகதி வரை கைது செய்யக்கூடாதென மேல்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர் மேல்முறையீட்டு நீதிமன்றில் ஒரு மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அதில் என்னை குற்றப்புலனாய்வுத்துறை கைது செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறது. எனவே என்னை கைது செய்யக் கூடாதென ஓர் இடைக்கால தடை விதிக்கவேண்டுமென கோரியிருந்தார். இதற்கமைய இவ் உத்தரவை வியாழக்கிழமை மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொள்ளுப்பிட்டியில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் குண்டுத் தாக்குதலை நடத்தியவரும் அவரிற்கு உதவிக்கு வந்தவரும் போலி அடையாள அட்டைகள் இவரின் நேரடிப் பணிப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ளதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் இதனை அவர் மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (32)

# கப்பல் விபத்தில் இலங்கையர் பலி

(கொழும்பு)

டுபாயில் இருந்து ஈரானுக்கு செல்லும் கடற்பாதையில் ஒரு கப்பல் தீ பிடித்ததனால் இலங்கையர் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார். இவர் பாதுக்கிங்கிய என்ற சிங்களவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் மொத்தம் 4பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

# மருதங்கேணி மாவட்ட வைத்தியசாலையில் வைத்திய சேவை எப்போது? —

இராணுவ நடவடிக்கை மூலம் முற்றாக அழிக்கப்பட்ட மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை தற்போது நிக்கொட்டின் நிதியுதவியுடன் 2கோடியே 30 இலட்சம் ரூபா செலவில் மாவட்ட வைத்தியசாலையாகக் கட்டப்பட்டு வருகின்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேசமானது சுமார் 50கிலோ மீற்றர் நீளமான பெரும் பிரதேசம் மணல்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பிரதேசம் வடக்கே பெருங்கடலும் தெற்கே தொண்டமனாறு கடல் நீரேரியும் இதன் எல்லைகளாகும். மிகவும் அகலம் குறைந்த (அகலம் 7கி.மீ ஆகும்) பிரதேசம் ஆகும்.

இந்தப் பிரதேசத்தில் முன்னர் அதாவது 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒரு கிராமிய வைத்தியசாலையும் ஒரு மருந்தகமும், ஒரு மத்திய மருந்தகமும் இருந்தன. இந்தப் பிரதேசத்தில் 18 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. இதில் தற்போது 8கிராம அலுவலர் பிரிவுகள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன. அதில் குறிப்பாக மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் இராணுவத்தின் உயர்பாதுகாப்புக்குள் உள்ளன.

இந்தப் பிரதேசத்தில் 4500க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் சுண்டிக்குளம் போக்கறுப்பு, கேவில், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி போன்ற கிராம மக்களுக்கான மருந்தகம் நித்திய வெட்டையில் இயங்கி வந்தது. அங்கு ஒரு நிரந்தர வைத்தியர் அங்கேயே தங்கியிருந்து அம்மக்களுக்கு வைத்தியசேவையைப் புரிந்துவந்தார். ஆனால் 1991ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணியில் இராணுவம் தரையிறக்கப்பட்டபோது சுண்டிக்குளத்தைத் தவிர ஏனைய கிராமங்கள் அனைத்தும் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டது. நித்தியவெட்டை மருந்தகமும், மருத்துவப் பொருட்களுடன் இராணுவத்திடம் அகப்பட்டது. வைத்தியரும், ஊழியர்களும் இடம்பெயர்ந்தனர்.

அதன்பிற்பாடு மருதங்கேணி வைத்தியசாலையும் அம்பன் மத்திய மருந்தகமும் மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கி வந்தது. பின்னர் 1996ஆம் ஆண்டு இராணுவம் மேற்கொண்ட சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் மருதங்கேணி, அம்பன் மத்திய மருந்தகங்கள் இராணுவத்தின் பிடிக்குள் அகப்பட்டன. 1999ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணி இராணுவ முகாம் தகர்ப்பின்போது நித்தியவெட்டை மருந்தகம் முற்றாக அழிக்கப்பட்ட நிலையிலும் 2000 ஆம் ஆண்டு மருதங்கேணி வைத்தியசாலையும் முற்றாக அழிந்த நிலையில் விடுதலைப் புலிகளினால் ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டது.

இந்நிலையில் 2002ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. மக்கள் மீள்குடியமர்வு மிகவேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. முதலில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி கிராமங்களில் தான் மக்கள் குடி யமர்ந்தனர். இவைகளைக் கருத்திற்கொண்டு வடமராட்சி கிழக்குப் புனரமைப்புக் குழுக்கள் முதலில் நித்தியவெட்டை மருந்தகத்தினைத் திறக்கும்படி உதவி அரசஅதிபரிடம் கோரிக்கை விடுத்தும், அது பயன்தரவில்லை. இப்பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்துவருவதால் வைத்திய தேவை மிக அவசரமானதாக இருந்தது. உடனடியாக திலீபன் மருத்துவமனை ஒன்று திறக்கப்பட்டது. அதன்பின் மீள்குடியமர்வு அதிகரிக்கத் தொடங்க மருதங்கேணி வைத்தியசாலை இயங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடப்பட்டது.

அப்போது கட்டடம் இல்லையென கூறப்பட்டது மக்களின் நிதியுதவியுடன் ஒரு தனியார் கட்டடம் திருத்திக் கொடுக்கப்பட்டும் அங்கு வைத்தியசாலை இயங்கவில்லை இப் பிரதேசமக்களின் மருத்துவசேவையை செய்வதற்கென இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஒரு சில தனிமனிதர்களின் முயற்சினால் கடந்த வருடம்ஆறு மாதங்கள் மாமுனை, உடுத்துறை, கட்டைக்காடு போன்ற இடங்களில் நடமாடும் மருத்துவசேவையை நடத்தி வந்தது. தற்போது அதுவும் இடைநடுவில் நின்று விட்டது. இப் பிரதேச மக்கள் பல கோரிக்கைகளை விட்டும் அது பயன்தரவில்லை.

இதேவருட முற்பகுதியில் மக்களினால் திருத்தி அமைக்கப்பட்ட தனியார் கட்டடத்தில் மருதங்கேணி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு இயங்கி வருகின்றது. இந்த வைத்திய சாலைக்கு ஒரு நோயாளர் காவுவண்டியினை கடந்த வருடம் நிக்கொட் நிறுவனம் வழங்கியுள்ளது. அது அன்று தொடக்கம் இன்று வரை யாழ்ப்பாணத்தில் தான் உள்ளது. இங்கு வெளிநோயாளர் பிரிவு ஆரம்பித்து ஆறு மாதங்கள் ஆகியும் "இன்னும் நோயாளர் காவு வண்டி தரவில்லை வெளிநோயாளர் பிரிவும் மாலை4.30 மணிக்கு மூடப்பட்டு விடும் இரவில் நோயுறும் நோயாளர்களை தனியார் வாகனங்களில் கூடுதலான பணம் கொடுத்து கிளிநொச்சிக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனால் வசதி குறைந்த மக்கள் பெரும் துன்பப்படுகின்றனர்.

இப்பிரதேசம் மிகவும் நீண்டது என்பதால் பொற்பதி ,மாமுனை, கட்டைக்காடு, ஆழியவளை போன்ற இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது என்று சென்ற ஆண்டு மார்கழி மாதம் இப் பிரதேசத்திற்கு நடமாடும் சேவையை மேற்கொண்ட அரச அதிபர் தெரிவித்தார். அதற்கான காணிகள் ஒதுக்கப்பட்டும் இன்றும் அவை [illegible] கட்டப்படவில்லை.

அம்பன் மத்திய மருந்தகம் மணற்காடு, குடத்தனை, பொற்பதி, அம்பன், நாகர்கோவில் மக்களின் மருத்துவசேவையை ஆற்றி வந்தது. இங்கு ஒரு பிரசவவிடுதியும் உள்ளது. இந்த வைத்தியசாலையும் 2001 ஆம் ஆண்டு இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்டது. அங்கு இராணுவ முகாமும் இருந்தது. வடமராட்சி கிழக்கு மற்றும் யாழ்மாவட்ட பொதுஅமைப்புக்களினதும் இப்பிரதேச மக்களினதும் நிர்ப்பந்தத்தை அடுத்து அம்பன் மத்திய மருந்தகத்தினை இராணுவம் சுகாதாரதிணைக்களத்திடம் கையளித்தது. சில திருத்த வேலைகளை செய்து முடித்த பின்பு வைத்தியசாலை உடனடியாக திறக்கப்படும் என சுகாதார திணைக்களம் அறிவித்தும் பலமாதங்கள் ஆகியும் திறக்கப்படவில்லை. ஆனால் இந்த வைத்தியசாலை குடத்தனை தென்னிந்திய திருச்சபையால் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டும் நடைபெறுவதாக தெரியவருகிறது. இதனால் இப்பிரதேச மக்கள் அதாவது குடத்தனை, அம்பன், பொற்பதி, மணற்காடு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் பருத்தித்துறைக்கு மருத்துவ சேவைக்காக செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அம்பன் மருத்துமனையை மீண்டும் இயக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கையினை எடுக்கவேண்டுமென அப்பிரதேச மக்கள் கோரிக்கையினை விடுக்கின்றனர்.

இந்த நிலையில் மருதங்கேணியில் புதிதாக அமைக்கப்படுகின்ற மாவட்டவைத்தியசாலையின் மருத்துவசேவை வடமராட்சிக் கிழக்கு மக்களுக்குஎப்போது? அதன் முதல் வேகம் இப்போது இல்லை கட்டட வேலைகள் மந்தகதி நிலையில் உள்ளது. முதற்கட்டமாக வெளி நோயாளர்கள் பிரிவும் ஒரு நோயாளர் விடுதியும் கொடுப்பதாக ஒரு தகவல்கள் உலாவருகின்றபோதும் அது எப்போது என்று தெரியவில்லை.

**இ.முரளிதரன்**
(வடமராட்சிகிழக்கு செய்தியாளர்)

---

# மாணவர்களின் இரவுநேரக்கற்றலுக்கு அயலவர்களால் பெரும் இடையூறு

## -தடுத்து நிறுத்துமாறு வேண்டுகை

(முள்ளியவளை)

இரவுநேரக் கற்றலில் ஈடுபட்டுவரும் மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய வகையில் அயலவர்கள் சிலர்! சினிமா பாடல்களை சத்தமாகப் போட்டுவருவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பின்னடைவு ஏற்பட்டுவருவதாக அளம்பில் பிரதேச பங்குத்தந்தை வணபிதா யூட் அமலதாஸ் அடிகளார் எமது செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் முள்ளியவளை வடக்கு சென்திரேசா பாலர்பாடசாலை மண்டபத்தில் தனது ஏற்பாட்டில் அப்பகுதி வறிய மாணவர்கள் மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 8.30 மணிவரை மின் ஒளியில்இரவு நேர கற்றலை கடந்த பலமாதங்களாக தொடர்ந்து வருகின்றனர் ஆனால் அயலிலுள்ள சிலர் மாணவர்கள் கற்றலை ஆரம்பிக்கின்ற நேரம் தொடக்கம் முடிவுடையும் நேரம் வரை ஈடுகொடுக்க முடியாதவாறு பலத்த சத்தமாக வானொலி பெட்டிகளையும் பாடல் ஒலி நாடாக்களையும், தொலைக்காட்சிகளையும் தினசரி போட்டு வருகின்றனர். மேற்படி சம்பந்தப்பட்ட நபர்களிடம் நேரடியாக விளங்கப்படுத்தியும் எதுவித பயனும் ஏற்படவில்லை.

மேற்படி விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையினருக்கு தெரிவித்தும் நிரந்தரதீர்வு கிட்டவில்லை இனியாவது சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்து மாணவர்களின் எதிர்காலத்திற்கு வழிகாட்ட முன் வர வேண்டும். தவறும் பட்சத்தில் இவ் இரவு நேரகற்றல் செயற்பாடு நிறுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையே உருவாகும் என மிக வேதனையுடன் தெரிவித்தார். (ஆ)

---

# தூயவனின் "யுத்தகாண்டம்" நூல் வெளியீட்டு விழா

(அலுவலகசெய்தியாளர்)

தூயவனின் "யுத்த் காண்டம்" நூல்வெளியீட்டு விழா எதிர்வரும் 21ஆம் திகதி (சனிக்கிழமை) பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி சுஜந்தன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நூல் வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டுரையினை கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்துவார் வைத்திய கலாநிதி கெங்காதரன் நூலினை வெளியிட்டு வைக்க வைத்திய கலாநிதி திருமதி எழுமதி கரிகாலன் முதற்பிரதியினை பெற்றுக் கொள்வார். சிறப்புரையினை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் வழங்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

---

# குற்றச்செயல்களைப் புரிந்த 50 பேர் மடுத்திருப்பதியில் கைது

(செட்டிகுளம்)

மடு தேவாலயப் பகுதியில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 50 இற்கு மேற்பட்டோரை தமிழீழ காவல்துறையினர் கைது செய்துள்ளனர். வெள்ளியன்று திருச்சொருபம் வலம் வந்தபோது அதிகளவானகளவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. விற்பனைக்காக மதுவை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டு மன்னார் மாவட்ட நீதி மன்றில் தமிழீழ காவல் துறையினரால் நீதியாளர் மயூரன் முன்னிலையில் முன்னிறுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் 50 இற்கு மேற்பட்டோர் ஆண், பெண் இருபாலாரும் கைது செய்யப்பட்டுள்ளன இவர்கள் அனைவருமே தென்பகுதியில் இருந்து வந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் பிற்பொக்கற், நகைகள் களவு எடுத்தமை தொடர்பாக கைது செய்யப்பட்டிருப்பதாகவும் இவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் உற்சவகால காவல்பணிமனைப்பொறுப்பாளர் சி.ராஜகோபால் தெரிவித்தார். (21)

---

# 14 ஆயிரம் குடும்பங்கள் மன்னாரில் மீள்குடியமர்வு

(செட்டிகுளம்)

இராணுவ நடவடிக்கையின் போது மன்னார் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த 14ஆயிரம் குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு இருப்பதாக மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

மீளக் குடியமர்த்தும் நடவடிக்கை விரைவாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும் மீள் குடியமர்த்தும் நடவடிக்கைக்கு வெடி பொருட்கள் பிரச்சினையாக இருக்கின்ற போதும் அவை அகற்றப்பட்டும் மீள் குடியமர்த்தப்படுவதாகவும் தெரிவித்தார். இதுவரை 14 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 84ஆயிரம் பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர். (21)

# 3750 மாணவர் தோற்றினர்

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 3750 மாணவர்கள் தோற்றினர். 20 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெற்றது. (மி)

---

## சிரமதானம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கல்மடுநகரிலுள்ள, சம்புக்குளம், வில்லிக்குளம் ஆகிய குளங்களில் தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் கமக்கார அமைப்பு இரண்டும் இணைந்து உலர் உணவுத் திட்டத்தின் அடிப் படையில் நீண்ட நாட்களாக மக்களின் பங்களிப்புடன் சிரமதானப் பணி நடைபெற்று வருகின்றது (12)

---

# வாழைச்சேனையில் கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள வீடொன்றின் மீது சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

இதனால் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ள போதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென வாழைச்சேனைப் பொலிசார் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் தொடர்பாக எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. குண்டு வீச்சுக்கான பின்னணி எதுவெனவும் புலப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. வாழைச்சேனை சிறிலங்கா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற சிறிலங்கா கிரிக்கெட் அணி முதற் தடவையாக அந்நாட்டுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய பெருமையைப் பெற்றுள்ளது.



ஸ்சிமித்

இடத்திற்கு முன்னேறலாம் என எதிர்பார்த்த சிறிலங்காவுக்கு ஒருவகையில் ஏமாற்றமே 5ஆவது இடமே கிடைத்தது.

தென்னாபிரிக்க அணியைப் பொறுத்து 300,400 ஓட்டங்கள் என்பது பெரியதொரு இலக்கல்ல. ஆனாலும் அதனை அடைய முடியாத வகையில் சிறிலங்கா அணியின் தந்திரோபாயமான அணுகுமுறை அவ்வணியை நிலைகுலையச் செய்துவிட்டது.

களத்தடுப்பு, பந்துவீச்சு என்பவற்றில் அணித் தலைவர் அத்தப்பத்து கையாண்ட உத்திகள் தென்னாபிரிக்க அணியைத் திணறடித்தது என்றால் மிகையில்லை.

முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றிபெற 325 ஓட்டங்களை நிர்ணயித்த அத்தப்பத்து தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்சிமித்தின் சாதுரியமான முடிவால் வெற்றி பெறும் வாய்ப்பை இழந்தார்.

இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் குமார் சங்கக்காரவின் 232 என்ற அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையுடனும் துல்லியமான பந்து

தாகக் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி திணறியது. மிஞ்சியது தோல்வியே.

தமக்கு யார் சவாலாக இருக்கப்போகின்றார் என்று நம்பியிருந்த தென்னாபிரிக்காவுக்கு அவர் இல்லாமல் ஏற்பட்டுள்ள இத்தோல்வி நிச்சயம் அதிர்ச்சியளிக்கும் ஒன்றாகவே இருக்கும்.



## பலசாலி யார்?

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திவந்த சிறிலங்கா அணி பலம்மிக்க துடுப்பாட்ட பந்துவீச்சு வரிசையைக் கொண்ட தென்னாபிரிக்க அணியைத் திணறடிக்கும் வகையில் பெற்றுள்ள வெற்றி தென்னாபிரிக்க அணிக்குக் கறைபடிந்த ஒன்றாகிவிட்டது.

அத்துடன் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்த நிலையில் உலகின் பலமிக்க அணியென்ற தென்னாபிரிக்காவின் கனவு தகர்ந்துபோய் தரவரிசையில் ஆறாவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது. இது சிறிலங்கா அணிக்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றியாக அமைந்து விட்டது.

இவ் வெற்றி மூலம் தரவரிசையில் இரண்டாவது

வீச்சுத் துணையுடனும் பலம்பெற்ற சிறிலங்கா அணி வெற்றி இலக்காக 493 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இந்நிலையில் முதலாவது டெஸ்ட் போட்டியை தோல்வியில் இருந்து ஒருவாறு காப்பாற்றிய ஸ்சிமித்துக்கு மீண்டும் போராட்டம். போட்டி நிறைவடைய இரண்டு நாட்கள் விக்கெட்டுக்களைத் தக்கவைத்துக்கொண்டு வெற்றி இலக்கை அடைவதா? அன்றி போட்டியை சமன்செய்வதா?

இந்நிலையில் போட்டியின் நான்காம் நாளில் குறுக் கிட்டது. மழை தென்னாபிரிக்காவைக் காப்பாற்றுமா, கைகொடுக்கவில்லை. வாசும், மாலிங்கவும் தமது கைவரிசையைக் காட்டினர். வேகப்பந்து வீச்சாளர்களையே சொத்

இதற்கிடையில் ஐந்துபோட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில் தென்னாபிரிக்கா தீவிரமாக ஆலோசிக்கத் தொடங்கியிருக்கும்.

எது எவ்வாறிருப்பினும் வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்து உற்சாகமாக இருக்கும் சிறிலங்கா அணிக்கு ஒருநாள் தொடரும் சாதகமாகவே அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தென்னாபிரிக்க அணியைப் பெ்றுத்து ஒருநாள் போட்டித் தொடரில் முரளி இடம் பெறாதது ஆறுதல் அளிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

பலசாலிகள் தென்னாபிரிக்காவா? சிறிலங்காவா? பொறுத்திருந்து பார்ப்போம்.

---

## மறுபிறவி

சிறிலாங்காவின் கிரிக்கெட் அணிக்கு தென்பகுதி காலியைச் சேர்ந்தவரான லசித்த மாலிங்கவை இணைத்துக் கொள்ளப்பட்டமை அணிக்கு பெருமையை தேடித்தந்துள்ளது.

1970ஆம் ஆண்டுகளில் அவுஸ்திரேலிய அணியில் பந்து வீச்சாளராக இருந்த ஜெப்தொம்சன் என்பவரின் மறுபிறவி என இவர் வர்ணிக்கப்படுகிறார். ஜெப்தொம்சன் அக்காலத்தில் துடுப்பாட்ட வீரர்களை அச்சுறுத்தியவர் மட்டுமன்றி சிலரை வைத்தியசாலைக்கு அனுப்பினார் என்றால் அவரின் பந்துவீச்சின் வேகம் சிறப்பு என்பவை பற்றி கூறுவது அவசிமன்று. அதே போன்றே மாலிங்கவும் பந்துவீச்சில் ஈடு படுவதாக புகழப்படுகிறார். அத்துடன்ரத்கமவிலிருந்து சிறிலங்கா அணிக்கு சேர்ந்துள்ள முதலாவது வீரர் என்ற புகழையும் இவர் பெற்றுள்ளார்.



மாலிங்க

கடந்த சில மாதங்களுக்கு முன்பு அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டதுடன் அவ்வணியின் டெரல் லீமனின் விக்கெட்டை முதலாவது சர்வதேச விக்கெட்டாகப்பெற்றார். எனினும் அவரது முதலாவது ஆட்டமிழப்பைப் பெற்ற பந்து வீச்சு (Noboll) முறையற்ற பந்து எனக் கூறப் பட்டதால் நிராகரிக்கப்பட்டது. எனின்ும் அடுத்த ஓவரில் முதலாவது பந்து வீச்சில் லீமன் ஆட்டமிழந்து சென்றார்.

இது தொடர்பாக மாலிங்க கருத்துத் தெரிவிக் கையில், இந்த முதலாவது விக்கெட்டைப் பெற்றதை அவுஸ்திரேலியாவின் அணித்தலை வராக கடமையாற்றிய அடம் கில்கிறிஸ்ட் பாராட்டி தனக்கு நல்ல எதிர்காலம் இருப்பதாக கூறியதைதான் பெருமையடைவதாகத் தெரிவித்தார்.

மாலிங்க இளம்வயது வீரர்என்றாலும் அண்மையில் ஆசியக்கிண்ணப் போட்டிகளிலும் சிறப்பாக பந்து வீசியதுடன் தென்னாபிரிக்காவுக்கு எதிரான சிறிலங்காவின் வரலாற்று வெற்றிக்கு வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாசுடன் இணைந்து பெரும் பங்கு வழங்கினார்.

வடிவேல்

---

ஒவ்வொரு ஒலிம்பிக்போட்டியிலும் ஏதாவது ஒரு புதிய அம்சம் இடம்பெறுவது வழக்கம் அது போட்டிக்காக இருக்கலாம். அதேவேளை பிரமாண்டமாகவும் இருக்கலாம்.

தற்போது நடைபெற்று வரும் 2004 எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியிலும் புதிதாக என்னென்ன சேர்க்கப்பட்டுள்ளன என்பது பற்றிப்பார்ப்போம்.

* முதன் முறையாக குத்துச்சண்டை போட்டிகளில் சில பெறுபேறுகளைப் பெறுவதற்காக கமரா தொழில்நுட்பம் பயன் படுத்தப்படுகின்றது.

இம்முறை எதென்ஸ் ஒலிம்பிக்கில் கலந்து கொள்கின்றன.

*சரித்திரத்தில் முதன்முறையாக ஒலிம்பிக் போட்டிகளின் உத்தியோகபூர்வ இணையத்தளம் கிரீஸ் ஆங்கிலம்,பிரெஞ் ஆகிய மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ளது.


*இம்முறை ஒலிம்பிக் போட்டிகளிலேயே பெண்களுக்கான மலயுத்த போட்டிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

*முதன் முதலாக ஒலிம்பிக் பத்திரிகை இணையத்தளம் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

## எதென்ஸ் ஒலிம்பிக் 2004 இல்...

*Fencing எனப்படும் வாட்போரில் இம்முறை பெண்களுக்கான போட்டியில் முதன் முறையாக sabne எனப்படும் நிகழ்வு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

*202 தேசிய ஒலிம்பிக் கமிட்டிகள்



*அறிமுக அட்டையானது முதன் முறையாக இலத்திரனியல் முறை மூலம் அறிமுகம் செய்யப்பட்டது.

*301 பதக்கம் வழங்கும் நிகழ்வுகள் 16 நாட்க்ளில் இடம்பெறவுள்ளது.

*எதென்ஸ் ஒலிம்பிக்கில் மொத்தமாக 10500 போட்டியாளர்கள் போட்டியிடுகின்றனர்.21,500 ஊடகவியாளர்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

*வேறெந்த ஒலிம்பிக்கிலும் இல்லாத அளவுக்கு இம்முறை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக 45000 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இதற்காக கடமையில் உள்ளனர்.

### ஒலிம்பிக்தீபம்

வேறெந்த ஒலிம்பிக்கிலும் பயன்படுத்தா வண்ணம் வித்தியாசமான வடிவமைப்பில் இம்முறை ஒலிம்பிக்தீபம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் எடை 700 கிராம்களாகும். 68.செ.மீற்றர் நீளம்கொண்டது.

இம்முறை முதன்முறையாக ஒலிம்பிக் தீபம் ஆபிரிக்க இலத்தினமெரிக்கா ஊடாக எடுத்துச்செல்லப்பட்டது இதனை சுமார் 260 மில்லியன் மக்கள் கண்டு களித்ததாக தெரிவிக்கப்படுகிறது. இவ் வருட ஒலிம்பிக்கில் மனதை நெகிழவைத்த சம்பவம் பிரேசில் இத்தீபத்தை ஏந்திச் சென்ற கால்பந்தாட்ட பீலே உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் வடித்தவாறு சென்றதுதான்.

# பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள சனாதிபதி இந்தியாவிடம் உதவி கோரல்!

- டோக்கியோ நிதியில் ஒரு பகுதியை தருவதாக உறுதிமொழி

**இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீளுவதற்காக விசேட கடன் வழங்கி உதவுமாறு இந்திய அரசாங்கத்திடம் சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க கோரியுள்ளார்.**

அண்மையில் இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென்னைச் சந்தித்து சனாதிபதி இக்கோரிக்கையை விடுத்தார் எனத் தெரிய வருகிறது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் வாக்குறுதியளிக்கப்பட்ட 45,000கோடி ரூபா நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதன் காரணமாகவே சனாதிபதி இந்தியாவிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஒரு மாதத்திற்கு முன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தபோது, பெற்றோலியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக கடன் தந்துதவுமாறு சனாதிபதி சந்திரிகா கோரியிருந்தார். இது தொடர்பாக, அண்மையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது இருதரப்பினருக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டிருந்தது. எனினும் பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே மேற்படி இணக்கம் ஏற்பட்டிருந்தது எனத் தெரியவருகிறது. தற்போது இலங்கையில் செயற்படும் இந்திய பெற்றோலிய நிறுவனத்துக்கு அரசாங்கம் வழங்க வேண்டிய பணத்தை மேற்படி கடன்மூலம் வழங்க வேண்டும் என்பது இதில் பிரதான நிபந்தனையாகும்.

ஆனால், இவ்வாறான நிபந்தனையை ஏற்றுக்கொண்டு கடன் பெற்றால், அதன்மூலம் பெற்றோலிய பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு திறைசேரியினால் இயலாமல் போகும். எனவே, இதற்கு அப்பால் விசேட கடன் உதவியை இந்தியாவிடம் கோருவது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென்னுடன் சனாதிபதி பேசியுள்ளார். சனாதிபதி கோரியவாறு விசேட கடன் கிடைத்தால் திறைசேரி எதிர்நோக்கும் நெருக்கடிகளை சில காலத்திற்கேனும் கட்டுப்படுத்த முடியும் என அரசாங்கம் நம்புகிறது. விரைவில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் எனவும், பேச்சுவார்த்தை ஆரம்பித்தால் 3 அல்லது 4 மாதங்களுக்குள், டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட 45,000 கோடி ரூபா நிதியில் ஒரு பகுதி கிடைக்கும். அதில் குறிப்பிட்டளவு தொகையை இந்தியா வழங்கும். விசேட கடனை திருப்பிச் செலுத்துவதற்கு பயன்படுத்துவதாகவும் இந்திய உயர் ஸ்தானிகரிடம் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

## - கைதுசெய்யப்படுவோரை 24 மணி நேரத்தில் -
## நீதிமன்றன்றத்தில் முன் நிறுத்தும் சட்டத்தைத் திருத்த வேண்டுகோள்

(கொழும்பு)

சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்படுபவர்களை 24 மணித்தியாலங்களுக்குள் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென்ற சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென சிறிலங்கா குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சரத் லூகொட வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இச்சட்டத்தின் காரணமாக சந்தேக நபர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் இல்லாத நிலையிலேயே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த நேர அளவு நீட்டிக்கப்படுமாக இருந்தால் இலங்கையில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களை பெருமளவில் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், நவீனரக ஆயுதங்கள் சகிதம் தற்போது இடம்பெற்று வரும் கொலைகள் அதிகரித்து வருவதாகவும் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி சரத் லூகொட குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிறிலங்கா பொலிசாரினால் வெளியிடப்பட்டுள்ள தகவல்களின் படி, கடந்த ஆறு மாதங்களில் மட்டும் சுமார் 35 படுகொலைகளும், 88 வாகனத் திருட்டுக்களும், 27 ஆயுத முனையிலான கொள்ளைகளும், 16 ஆட்கடத்தல்களும், 23 பாதாள உலகக் கோஷ்டிக் கொலைகளும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதானப் பேச்சுக்கள் குறித்த விடயத்தில் அரசின் உத்தரவாதம் எங்கள் கையில்

-ஜே.வி.பி. அமைச்சர் அறிவிப்பு

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபை குறித்த யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை அரசாங்கத்திடமிருந்து தாம் ஏற்கனவே பெற்றுக் கொண்டுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் ஜே.வி.பி.யின் அமைச்சர் அநுரகுமார திஸ்ஸநாயக்க இதனைக் கூறியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் ஆட்சியிலிருந்திருந்தால் இன்று தமிழீழம் உருவாகியிருக்குமெனவும் குற்றஞ்சாட்டியிருக்கும் அவர், தனிநாடொன்றை அமைப்பதென்ற விடுதலைப்புலிகளின் முயற்சியினை தவிர்க்கும் வகையில் செயற்பட்டு வரும் அரசாங்கத்துக்கு நன்றி செலுத்துவதற்கு ஜே.வி.பி. கடமைப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

தமிழீழத்தை உருவாக்கும் முயற்சிகளை தவிர்த்துக்கொள்ள முடிந்த அரசாங்கத்தால் கொழும்பிலும், கிழக்கிலும் இடம்பெற்று வரும் தொடர் கொலைகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத கையறுநிலை காணப்படுவதைத் தமது கட்சி ஒத்துக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, வரிவிலக்குடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்துக்கு நான்கு வாகனங்கள் வழங்குவதென்ற அரசாங்கத்தின் முடிவினைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் ஜே.வி.பி.யின் அமைச்சர் அநுரகுமார திஸ்ஸநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## சனாதிபதிக்கு அரச காணிகளை வழங்கிய ராஜித சேனாரட்ண மீது நடவடிக்கை வேண்டும்

பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதிக்கும், அவரது மகனுக்கும் அரச காணிகளை வழங்கியமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ண மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போது வெளிநாடு சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க இலங்கைக்குத் திரும்பியதும், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் காணியமைச்சரான ராஜிதசேனாரட்ண அரச நிலங்களை களவாடியுள்ளதாக சமீபகாலமாக அரசாங்க தரப்பால் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்ற போதிலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது அமைச்சரவைக்கோ அறிவிக்காமல் சனாதிபதிக்கும், அவரது மகனுக்கும் காணிகளை வழங்கியுள்ள தனது சக கட்சிக்காரரான ராஜித சேனாரட்ண மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு நாம் தயார் ஐ.ம.சு. முன்னணி அரசாங்கம் தயாரில்லை

ஜாதிக ஹெலஉறுமய விசனம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு தமது கட்சி தயாராக இருந்த போதிலும், அரசாங்கம் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்வதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட வருமாறு தாம் அரசாங்கததிற்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும், ஆனால் இந்த அழைப்புக்கு உரிய முறையில் பதிலளிப்பதற்கு கூட்டமைப்பு அரசாங்கம் காலம் தாழ்த்தி வருவதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் சிலர் தம்முடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ள போதிலும் இதுதொடர்பாக உத்தியோகபூர்வ முடிவுகள் இன்னமும் தமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தை கவிழ்க்கும் எந்த விதமான நடவடிக்கைகளுக்கும் தமது கட்சி ஆதரவளிக்காது எனவும் தெரிவீத்துள்ள அவர், கடந்த பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் சனாதிபதியுடன் இடம்பெற்ற இரண்டு சந்திப்புக்களிலும் இந்த முடிவினைத் தாம் அறிவித்திருந்தாகவும் தெரிவித்துள்ளார். இதேவேளை ஜாதிக ஹெல உறுமயவுடன் அரசாங்கம் இணைந்து செயற்படுவது தொடர்பாக அரசாங்கத்துள் அங்கம் வகிக்கும் சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் உடுவே தம்மாலோக தேரர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவ முகாமிலிருந்து கடத்தப்பட்ட பொருட்கள் பொலிசாரால் மீட்பு

(கொழும்பு)

இராணுவ முகாம் ஒன்றில் இருந்து கடத்தி வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பெருந்தொகையான பொருட்களை பொலிசார் கண்டி முறுத்தலாவ என்ற இடத்தில் இருந்து மீட்டுள்ளனர்.

சுமார் 700 மீன் ரின்களும், பிஸ்கட்வகைகளும்இவ்வாறு மீட்கப்பட்டதாக பொலிசார். கூறியுள்ளனர். மாதுறு ஓயா பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமில் இருந்தே இவை கடத்தி வரப்பட்டிருக்கலாமென் பொலிசார் தெரிவித்தனர். (32)

## சமுர்த்தி நிவாரணம் பெறுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டாம்

- சனாதிபதி உத்தரவாம்

சமுர்த்தி நிவாரணம் பெறும் வறியவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டாமென சனாதிபதி தமக்கு அறிவித்திருப்பதாக சமுர்த்தி அமைச்சர் பவித்திரா வன்னி ஆராச்சி தெரிவித்துள்ளார்.சமுர்த்தி நிவாரணம் பெறுவோர்களின் குடும்பங்களில் பிரசவம், மரணம் ,திருமணம் வைத்திய சிகிச்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை சட்டரீதியாக்குவதற்கு கெபினட் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு தீர்மானித்திருப்பதாக அமைச்சர் பவித்திரா வன்னி ஆராச்சி தெரிவித்துள்ளார்.

மாபெரும் விவசாயக் கண்காட்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் · கால்நடை உற்பத்தித் திணைக்களம் · விவசாயத்திணைக்களம் · கைத்தொழில் திணைக்களம் என்பன இணைந்து நடாத்தும்

மாபெரும் விவசாயக் கண்காட்சி

இடம்:- ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக் கச்சி

காலம்:- 01 - 09 - 2004 தொடக்கம் 04 - 09 - 2004வரை

ஆர்வலர்களே!

*தங்கள் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும், மேலதிக விவசாய அறிவினைப் பெறுவதற்கும்,

*சிறந்த தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிவதற்கும், செய்கை முறையிலும்,ஒளிப்பட,புகைப்படக் காட்சியுடனும், திட்ட விளக்கவுரைகளுடனும் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள், சிறந்த உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விவசாய, கால்நடை உற்பத்திகளை காட்சிக்கு வைப்பதற்கும் , விற்பதற்கும் நாடுங்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், வட்டக்கச்சி

(சி.9789)



## நாடு உயர்வளர்ச்சியை அடைய 7துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

### இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்

நாட்டின் பொருளாதாரம் உயர் வளர்ச்சியை அடைய வேளாண்மை, நீராதாரம், கல்வி வேலைவாய்ப்பு, சுகா தாரம் உள்ளிட்ட 7 துறைக ளுக்கு முன்னுரிமை அளிக் கப்படும் என்று பிரதமர் மன் மோகன்சிங் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார்.

அதேநேரத்தில் பொருளாதார வளர்ச்சி இலக்கு களை அடைய அரசு இயந்திரத்துக்கு உத்வேகம் அளித்து அதை ஆக்கபூர்வமாகச் செயற்பட வைக்கும் சவாலான பணியையும் நிறைவேற்ற வேண் டும் என்று பிரதமர் வலியுறுத்தினார். நாட்டின் 58 ஆவது சுதந்திர தின மான நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை டில்லி செங்கோட்டை யில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அப்போது அவர் மேலும் பேசியதாவது, வேளாண் மைத் துறை, நீராதாரம், கல்வி, சுகாதார வசதி, வேலைவாய்ப்பு, நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்குப் புத் தெழுச்சி,அடிப்படைக் கட்டமைப் புத் துறைகள் ஆகிய ஏழும் வளர்ச்சி எனும் பலத்தின் முக்கிய மான தூண்களாகும். உயர் பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டுமானால், அனைத்து மக்க ளுக்கும் சம அளவில் பயன்கள் சென்று சேரவேண்டுமானால் அந்தப் பாலத்தைக் கடந்தாக வேண்டும். கிராம்ப்புறங்களின் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள் முக்கியமானது தண்ணீர்ப்பிரச் சினைக்குத் தீர்வு காண்பதாகும். பாசனத்திட்டங்களில் கூடுதல் முதலீடு, விவசாயிகளுக்கு போது மான கடனுதவி, தேவையானளவு மின்சாரம், தொடக்கக்கல்வி, கிராமப்புறங்களை நகர்ப்புறங களுடன் இணைக்க இணைப்புச் சாலைகள், விவசாயத்துறையை நவீன மயமாக்கும் வகையில் புதிய கட்டமைப்பு வசதி களை ஏற்படுத்துதல் ஆகியனவும் புதிய திட்டத்தில் அடங்கும் நாட்டின் ஒருபுறம் வரட்சி தாக்குகிறது. மறு புறம் வெள்ளத்தால் பெரும் சேதம் விளைகிறது. எனவே நீரா தாரப் பிரச்சினையைத் தீர்க்க அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் தேசியக் கண்ணோட்டத்துடன் சிந்திக்க வேண்டும். தரிசு நில சாகு படி,மாற்றுப்பயிர் சாகுபடி, பாசனமுறை, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் நவீன அறிவியல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். விவசா யப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை வளம் பெற தகவல் தொடர்பும், சாலை இணைப்பும் அவசி யமாc வை.இதில் தனியார் துறையின் ட.. கேற்கும் சமுதா யத்தின் கூட்டுச் செயற்பாடும் தேவை என்...

## பெற்றோல் டீசல் விலை உயர்வு தீர்மானம் ஒத்திவைப்பு

இந்தியாவில் பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விற்பனை விலையை ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு முதல் உயர்த்துவது என்ற உத்தேச முடிவு ஒத்தி வைக்கப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் முதல் மற்றும் 15ஆம் திகதி களில் விலையைத் திருத்தி அறிவிக்க அரசு எண்ணெய் நிறுவனங் களுக்கு அதிகாரம் வழங்கியது. அந்த அடிப்படை யில் அவை நடவடிக்கை எடுத்து வரு கின்றன. சர்வதேச சந்தை யில் கச்சா பெற்றோலிய எண் ணெய் அபரிமிதமாக உயர்ந்து வரு வதால் அதன் எதிரொலி யாக இந்தியாவிலும் பெற்றோல் டீசல் ஆகியவற்றின் விலையை உயர்ந் துவது தவிர்க்க முடியாத தாகி விட்டது. இந்நிலையில் ஆகஸ்15 ஆம் திகதி என்பது ஞாயிற் றுக்கிழமை அதிலும் தேசிய விடுமுறை நாளாகவும் இருந்ததால் எண்ணெய் நிறுவன அதிகாரிகளால் கூட்டம் நடத்த முடியாமற் போனதாகவும்,விலை உயர்வு, முடிவு இதனால் தள்ளிப் போடப் பட்டுவிட்டதாகவும் இந்திய எண்ணெய்க் கூட்டுத் தாபனம் தெரிவித்துள்ளது.


## கிராமிய அபிவிருத்தி வங்கி

### பணிநிலை வெற்றிடம்

கிராமிய அபிவிருத்தி வங்கியினால் கீழ் காணப்படும் பணிநிலைக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:- I:- அலுவலர்**

தகைமை:- க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில சகல பாடஙகளிலும் திறமைச்சித்திக்குக் குறையாத பெறுபேற்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**பணிநிலை:- II: எழுதுனர்**

தகைமை:- க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதபாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி அடைந் திருப்பதுடன் க.பொ.த. உயர் தரத்தில் வர்த்தகப்பிரிவில் 3 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அகவை:- விண்ணப்ப முடிவுத் திகதியில் 20 அகவைக்கு மேற்பட்ட வராகவும் 35 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

மாதாந்த ஊதியம்:- வங்கியின் ஊதிய அளவுத்திட்டத்திற்கமைய வழங்கப் படும்.

விண்ணப்பதாரிகள் அருகில் உள்ள கிராமிய அபிருத்தி வங்கிக் கிளை களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி 15. 09. 2004இற்கு முன் கிராமிய அபிவிருத்தி வங்கி கிளைகளிலேயே ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுமேலாளர்,
கிராமிய அபிவிருத்தி,
வங்கி, மத்திய செயலகம்.

(சி-10075)



## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சிப் பகுதியில் இயங்கும் கல்வி சார் நிறுவனம் ஒன்றிற்குக் கீழ்க்குறிப்பிடப் படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை:-ஆசிரியர்
பாடங்கள்:-கணிதம்
விஞ்ஞானம்
தமிழ்மொழி
வர்த்தகம்

தகைமைகள்:-
*க.பொ.த உ/தரத்தில் குறித்த பாடப்பரப்பில் 3 பாடங்கள் சித்தி.

*பட்டதாரிகளிற்கு முன்னு ரிமை வழங்கப்படும்.

*ஊதியம் பேசித் தீர்மானிக் கப்படும்.

தகைமையுள்ளோர் 21 – 08 – 2004 அன்று 10.00 மணிக்கு கிளி நொச்சி மகாவித்தியாலயத்திற்குத் தமது சுயவிபரக் கோவை மற்றும் கல்விச் சான்றிதழ்களுடன் வருகை தர வும்

(4967) நிர்வாகம்



## யாழ். வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் யாழ். வர்த்தகக் கண்காட்சி-2004


### ஒகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும் உள்ளூர் உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக்கண்காட்சி ஒகஸ்ட் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை யாழ்.மத்தியகல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள்,வர்த்தகர்கள் , தொழில்நுட்பநிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றிப் பயன் பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

சி.10128

~யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.





பெண்களுக்கான டென்னிஸ் ஒற்றையர் ஆட்டத்தில்கிறீஸின் எலெனிடனிலிடெளவ் கொலம்பியாவின் கற்றலினா கஸ்ரோலோனாவை நோக்கிப்பந்தைத் திருப்புகிறார்.




ஐக்கியஇராச்சியத்தின் பந்து வீச்சாளர்கத்தரின் (ஜாக்கெற்றுடன்) எட்டாவது இன்னிங்சில் ஜப்பானின் பந்து வீச்சாளர் யூரி தகயாமாவை வென்றதைத் தனது அணியினருடன் கொண்டாடுகிறார்.




பெண்களுக்கான குறிவைக்கும் போட்டியில் கொரியாவின் லீயொநா குறி பார்க்கிறார்.








# மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றிபெறும் நிலையில்



இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவு அணிகளுக்கிடையில் மான்செஸ்டரில் நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றிபெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. 231 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடும் இங்கிலாந்து அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மேற்கிந்தியத்தீவு வெற்றி பெறும் வாய்ப்புக் கிடைத்தபோதும் சரியாக பயன் படுத்தத் தவறிவிட்டது.

முதலாவது இனிங்சில் 65 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த மேற்கிந்தியத்தீவு, 165 ஓட்டங்களுக்கு இரண்டாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நான்கு போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி 2-0 என்ற நிலையில் முன்னணி வகிக்கிறது.

## ஜப்பான் வீராங்கனை சாதனை



ஜுடோ போட்டியில் ஜப்பான் வீராங்கனை ரியோகோ தானியின் (மேலே) கிடுக்கிப் பிடியில் சிக்கித் தவிக்கிறார். பிரான்ஸின் பிரடெரிக் ஜோஸிநெட்.

மகளிர் 48 ஜூடோ பிரிவில் தங்கம்வென்றார் ஜப்பானின் ரியோகோ தானி.

இதன் மூலம் ஒலிம்பிக்கில் இப்பிரிவில் தொடர்ந்து 2 தங்கம்வென்ற முதல் வீராங்கனையாகத் திகழ்கிறார் அவர்.

தொடர்ந்து 4 ஆவது ஒலிம்பிக்கில் பங்கேற்கும் தானி, அனைத்திலும் இறுதிப் போட்டியில் விளையாடியவர். 1992, 1996 ஒலிம்பிக்கில் வெள்ளி வென்றார். 2000 இல் தங்கம் வென்றார்.

சனிக்கிழமை இரவு நடைபெற்ற ஆட்டத்தில் அவர் பிரான்ஸின் பெட்ரிகோ ஜோஸிநெட்டை வென்றார்.

## காலிறுதியில் ஆர்ஜென்டீனா

ஒலிம்பிக் கால்பந்தாட்டத்தில் ஆர்ஜென்டீனா ஆடவர் அணி காலிறுதி ஆட்டத்தை உறுதி செய்துகொண்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'சி' பிரிவிற்கான லீக் ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் டுனீஷியாவின் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தியது. இதையடுத்து இன்று தனது கடைசி லீக் சுற்றில் அவுஸ்திரேலியாவுடன் விளையாட உள்ளது ஆர்ஜென்டீனா. அந்த ஆட்டத்தில் தோற்றாலும் ஆர்ஜென்டீனாவுக்கு காலிறுதி வாய்ப்புக்கு கவலையில்லை. அதேசமயம் அவுஸ்திரேலியா அந்த ஆட்டத்தை சமன் செய்வதன் மூலமே காலிறுதி வாய்ப்பைப்பெற முடியும்நிலையில் உள்ளது.




## தென்னாபிரிக்க நீச்சல் அணி சாதனை

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் 4x100 அஞ்சல் நீச்சல் போட்டியில் தென்னாபிரிக்க நீச்சல் அணி புதிய உலகசாதனை படைத்துள்ளது.

தென்னாபிரிக்கர்கள் குறித்த தூரத்தை நீந்திக் கடக்க 3 நிமிடம் 13.37 செக்கன்களை எடுத்துக்கொண்டனர்.

போட்டியின் ஆரம்பத்தில் நெதர்லாந்து வீரர்கள் முன்னிலை வகித்த போதும் கடும் போராட்டத்துக்குப் பின்னர் தென்னாபிரிக்க அணி முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்தது.

2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி 3 நிமிடம் 13.67 செக்கன்களில் குறித்த தூரத்தை கடந்து ஏற்படுத்திய சாதனையை தென்னாபிரிக்க அணி முறியடித்துள்ளது.

## துருக்கி வீராங்கனை அசத்தல்!

'ஸ்நாட்ச்' முறையில் தனது எடைக்கும் மேலாக ஒரு மடங்கு எடையைத்தூக்கி உலக சாதனை படைத்தார் துருக்கி வீராங்கனை நுர்கான் தேலான். எதென்சில் சனிக்கிழமை நடைபெற்ற மகளிருக்கான 48 கிலோ எடைப்பிரிவு பளு தூக்குதலில் இவர் ஸ்நாட்ச் பிரிவில் 97.5 கிலோ எடையைத் தூக்கித் தங்கம் வென்றார். ஒட்டு மொத்தமாக210(97.5,112.5) கிலோ எடை தூக்கினார். அவர் இப் பிரிவில் இந்தியாவின் குஞ்சராணி தேவி மொத்தம் 190 கிலோ(82.5, 107.5)எடை தூக்கி 5 ஆவது இடத்தையே பிடித்தார்.

## ஹொக்கியில் இந்திய அணி நெதர்லாந்திடம் தோற்றுப்போனது

எதென்ஸ் ஒலிம்பிக் ஆடவர் ஹொக்கியின் முதல் ஆட்டத்தில் இந்தியாவை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது நடப்புச் சம்பியனான நெதர்லாந்து.

முன்னதாக "பி" பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 4-1 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தை வென்றது.

மற்றொரு "பி" பிரிவு ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 2-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனாவை வென்றது.

"ஏ" பிரிவில் தென்கொரியா,ஸ்பெயின் இடையேயான ஆட்டம்1-1 என்ற கோல் கணக்கில் சமனானது. ஏ பிரிவின் மற்றொரு ஆட்டத்தில் உலக சம்பியன் ஜேர்மனி 2-1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது. இன்று இரவு இந்திய நேரப்படி 8.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் தென்னாபிரிக்காவைச் சந்திக்கிறது இந்தியா.

## 10,000 மீற்றர் போட்டியிலிருந்து விலகினார் எதியோப்பிய வீராங்கனை

10000 மீற்றர் எதென்ஸ் ஒலிம்பிக் ஓட்டப்போட்டிகளில் இருந்து எதியோப்பிய வீராங்கனை விலகிக் கொண்டுள்ளார்.

அதற்கான பயிற்சிகளையும் முடித்துக்கொண்ட நிலையிலேயே போட்டி நிகழ்ச்சிகளில் இருந்து ஒதுங்கிக் கொண்டுள்ளதாக எதியோப்பிய மெய்வல்லுநர் சம்மேளனம் தெரிவிக்கின்றது. அவருக்குப் பதிலாக டிவாவா சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். 22 வயதுடைய இவர் 50,000 மீற்றர் போட்டியிலும் பங்குபற்றவுள்ளார்.

## தங்கப்பதக்கம்

நவீன ஒலிம்பிக் போட்டிகளில் சோவியத் யூனியன் மற்றும் பொதுநலவாய நாடுகளின் சுதந்திர நாடுகள் என்பவற்றின் கீழ் போட்டியிட்டு வந்த ரஷ்யா தனது 500 ஆவது தங்கப்பதக்கத்தை நேற்று முன்தினம் வென்றெடுத்துள்ளது. ஆண்களுக்கான குறிபார்த்துச் சுடும் போட்டியிலேயே இப்பதக்கம் ரஷ்யா வசமானது.


# மன்னார், கிளி. மாவட்ட கராத்தே வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்

கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்ற கிளி-மன்னார் வீர வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்விற்கு கிளி-மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா தலைமை தாங்கினார்.

கௌரவிக்கப்பெற்ற வீரர்கள் விபரம்:- மரியாம்பிள்ளை அருள் ஜென்சன் (1ஆம் இடம் 65Kg) செல்லத்துரை லகுநாதன் (1ஆம் இடம் 70Kg) நல்லசாமி கிறிஸ்தோவர் (2 ஆம் இடம்50Kg) சின்னத்துரை விஜயராஜ்(மூன்றாம் இடம் 75Kg) நல்லசாமி கிறிஸ்தோவர் (காட்டாஸ்-3ஆம் இடம்)

கிளி. வீராங்கனைகள்:-கனகசிங்கம் தனுஸ்யந்தி (முதலாம் இடம்-50Kg)அருளானந்தம் மேரி அருள்கல்பனா (2ஆம் இடம்-48Kg) றேகா(2ஆம் இடம்-55Kg) கனகசிங்கம் தனுஸ்யந்தி (2ஆம் இடம்-காட்டாஸ்) கனகசிங்கம் வினோஸ்யந்தி(3ஆம் இடம்-காட்டாஸ்) மன்னார் வீராங்கனைகள்- இ.தேவிகா (1ஆம் இடம்-53Kg) சி.சுபாஜினி (2ஆம் இடம்-46Kg) தம்பிப்பிள்ளை கலைச்செல்வி (3ஆம் இடம் காட்டாஸ்) இவர்கள் அனைவரும் பயிற்சி ஆசிரியர் சி.விஜயராஜ் அவர்களின் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தமிழீழ கராத்தே ஒன்றியத்தால் நடாத்தப்பெற்ற அனைத்து கராத்தேப்போட்டிகளிலும் பங்கு பற்றி முதலிடத்தைப் பெற்ற ம.அருள்ஜென்சனுக்கு அவரது பயிற்சி ஆசிரியரால் வெற்றிக்கேடயமும், கராத்தே உடைத்தொகுதியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (சோ,கு)











அமெரிக்காவின் மைக்கல் பெல்ப்ஸ் ஆண்களுக்கான 200 மீற்றரில் போட்டியிடுகிறார்.



ஆண்களுக்கான 200 மீற்றர் நீச்சல் போட்டியின் அரையிறுதியின் பின் முடிவுகள் அறிவிக்கும் பலகையைப் பார்வையிடும் அமெரிக்காவின் மைக்கல் பெப்ஸ், அவுஸ்திரேலியாவின் லான்ரோப்.




ஜேர்மனியின் காற்டின் நற்ஸ்கேஸ் ஸ்ரொம் பொறோவ்கி கடும்காற்றின் மத்தியில் படகு வலித்து பயிற்சி செய்கிறார்.




டென்னிஸ் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றில் சுவிடனின் தொமஸ் என்க்விஸ்ஸை வென்றதைக் கொண்டாடும் ஸ்பெயினின் கார்லோஸ் மோயா.







## சிந்தனைக்கு



தன்னிறைவான பொருளாதாரம் எமது தேசிய வாழ்விற்கு மூலாதார மானது; தனியரசு நிர்வாகத்திற்கு அத் திவாரமானது.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 17-08-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## தவறான மதிப்பீடாகிவிடும்

கிளிநொச்சிக்கு இராஜதந்திரிகளின் வருகை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. நோர்வேயின் பிரதித்தூதுவர் ஜப்பானின் தூதுவர் இதனைத் தொடர்ந்து நெதர்லாந்து, பிரித்தானியா, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் இராஜதந்திரிகள் கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளமை இதனை வெளிப்படுத்துகிறது.

இவர்களின் இவ்விஜயத்தின் பின்னணியில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கை நிச்சயமாக இருக்கும் என்றே எதிர்பார்க்கலாம். இத்தகையதொரு நிலைக்கு அண்மையில் சனாதிபதி சந்திரிகா வெளியிடும் அறிவிப்புக்கள் அடிப்படையாக இருக்கலாம்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் சமாதானப் பேச்சுக்கள் குறித்து வெளியிட்டுவரும் அறிவிப்புக்களும்–அதனுடன் இணைத்துப் பார்க்கத்தக்கதான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து சந்திரிகா இராஜினாமாச் செய்தமையும், நோர்வே அரசிற்கு சமாதான முயற்சகளை முன்னெடுக்குமாறு விடுத்துள்ள அழைப்பும் இராஜதந்திரிகள் மட்டத்தில் சனாதிபதி சந்திரிகா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுவிட்டதானதொரு தோற்றப்பாட்டை உருவாக்கியிருக்கலாம்.

இந்நிலையில், விடுதலைப்புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக்கொண்டு செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபடும் வகையில் இராஜதந்திர தரப்பில் மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே இவர்களின் கிளிநொச்சி விஜயங்கள் இருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

சர்வதேச சமூகம் விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளமையும், இருதரப்பும் இதற்கு இணக்கப்பாடான நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும் எனக் கூறுவதும் எதிர்பார்ப்பதும் தவறில்லைத்தான். அத்தோடு இந்நிலைப்பாடானது வரவேற்கத்தக்கதும் கூட.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கத்துடன் யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்றைச் செய்துகொண்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு எப்பொழுதும் தயாராகவே உள்ளது. ஆனால் பேச்சுவார்த்தைகள் ஒருபுறத்தில் நம்பகத்தன்மையானதாகவும் உறுதிமிக்கதானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் தமிழ் மக்களின் அத்தியாவசியமானதும், அவசரமானதுமான தேவைகள் குறித்து முதலில் பேசப்பட வேண்டும் என்பதிலும் அக்கறையாகவுள்ளது.

ஆனால், சிறிலங்கா அரசதரப்பு இத்தகையதொரு உறுதியான நிலைப்பாட்டைக்கொண்டதாக இல்லை. மாறாக யுத்தநிறுத்த உடன்பாட்டுக் காலத்தைப் பயன்படுத்தி அரசியல்–இராணுவ–பொருளாதார அனுகூலங்களை ஈட்டிக்கொள்ளவே அது விரும்பியது. இதேவேளை தமிழ் மக்களின் உரிமைகள் குறித்தோ அன்றி அவர்களின் தேவைகள் குறித்தோ அரசாங்கம் அக்கறை கொண்டிருக்கவில்லை.

இன்று கூடச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பது பற்றியும், இடைக்கால நிர்வாகம் பற்றியும் பேசிவருகின்றாரே ஒழிய அதில் அவர் ஓர் உறுதியான முடிவைக் கொண்டவராக இல்லை. அறுதிப்பெரும்பான்மையற்ற அரசாங்கம் தனது தேவைக்கேற்ப சமாதான முயற்சிகளைப் பந்தாடத் தயங்கமாட்டாது.

இந்நிலையில், சனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய அறிவிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு அரசியலில் மாற்றங்கள் வரலாம். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்புடன் யாராவது நடவடிக்கைகளைமேற்கொள்வார்களேயானால் அவர்கள் சனாதிபதி சந்திரிகா குறித்தோ சிங்கள ஆட்சியாளர்கள் குறித்தோ சரியான மதிப்பீடற்றவர்களாகவே இருப்பர்.

ஆகையினால் சமாதானப் பேச்சுவார்த்தை விடயத்தில் இருதரப்பையும் மேசைக்குக் கொண்டுவர முனையும் எத்தரப்பும் முதலில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் பேச்சுவார்த்தையில் கொண்டுள்ள உறுதிப்பாட்டைத் தெளிவாகக் கண்டறிதல் வேண்டும். ஏனெனில் பேச்சுவார்த்தை குறித்து உறுதியான நிலைப்பாடோ, தெளிவான முடிவுகளோ இல்லாதது மட்டுமல்ல, வரலாற்று ரீதியில் நம்பகத்தன்மை கொண்டவர்களாகவும் இருக்கவில்லை.

அவ்வாறு இல்லாது சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அழுத்தம் கொடுப்பதில் பயனில்லை. மாறாக சிங்கள அரசின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்கு உதவுவதாகவுமே இருக்கும்.

# ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் காதருக்கு பிணைவழங்க உயர் நீதிமன்றம் மறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சருமான அப்துல் காதர் எதிர்வரும் 30ஆம்திகதி வரை விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை கொழும்பு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் நேற்றைய தினம் கொழும்பு பிரதான நீதிவான் குசலா சறோஜினி வீரவர்த்தின முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர் மீதான விளக்கமறியலை நீடிக்கும் இந்த உத்தரவு வழங்கப் பட்டது. முன்னாள் அமைச்சரான அப்துல்காதர் பொது நிதியில் இருந்து பத்து இலட்சம் ரூபாவை தவறான முறையில் கையாண்டமைக்கான அறிக்கையை ஊழல் மோசடிப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் நேற்றுச் சமர்ப்பித்தனர்.

இதேவேளை அப்துல்காதர் மீதான குற்றச்சாட்டுப் பிரதேசம் கொழும்பு நீதிமன்ற பிரிவிற்குப் அப்பாற்பட்டதால் அதுதொடர்பாக உத்தரவு பிறப்பிக்க கொழும்பு பிரதான நீதிமன்றத்திற்கு சட்ட அதிகாரம் இல்லையென இவருக்குச் சார்பாக ஆஜரான சட்டத் தரணிகள் தெரிவித்துள்ளதோடு இதனைக் கருத்திற் கொண்டு அவரை விடுதலைசெய்ய வேண்டும், அல்லது பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டுமென அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் பொதுச் சொத்தோடு தொடர்புடைய வழக்கெனக் காரணம் காட்டி நீதிவான் பிணை வழங்க மறுத்துள்ளார்.

# மேலும் கடனுக்குள் மூழ்காத வகையில் அவதானத்துடன் செயற்பட வேண்டியுள்ளது

–சிறிலங்கா திறைசேரிப்பிரதிச் செயலாளர்

அரச கடன்களுக்கான வட்டியைச் செலுத்துவதற்கென அரசாங்கத்திற்கு பாரிய தொகையொன்றை ஒதுக்க வேண்டியுள்ளது. அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர் விணைப் பெற்றுக் கொடுப்பதற்கும் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. இந்நிலையில் மேலும் கடன்களுக்குள் மூழ்காத வகையில் அவதானத்துடன் செயற்பட வேண்டியுள்ளது. இவ்வாறு திறைசேரியின் பிரதிச் செயலாளர் சுமித் அபேசிங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இதன் அடிப்பபடையிலேயே டீசல் விலையை அதிகரிக்காமல் கட்டுப்படுத்த அரசாங்கம் மானியம் வழங்குகிறது.

உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ள போதிலும் மக்களின் வாழ்க்கைச் சுமையைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் டீசல் விலையை அதிகரிகக வில்லை. இதற்கென பிரதி மாதமும் அரசாங்கத்திற்கு 500 மில் லியன ரூபா நட்டமேற் படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையில் இரண்டு முக்கிய திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் குறிப்பிடக்கூடிய ஒன்றாக பிரதேசமட்ட சமமற்ற தன்மையைச் சீர் செய்தலாகும். இத்திட்டத்தின் கீழ் சில தேர்ந்தெடுக்கப்பட்ட அரச திணைக்களங்கள் மறுசீரமைக் கப்படும். அத்துடன் அங்கு ஊழியர்களை அதிகரிக்காது தற்போது சேவையிலுள்ளோரை வைத்துச் சிறந்த சேவை பெற்றுக் கொள்ளப் படும். இதன்படி பயிற்சிகள் வழங் கப்படுவதற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப் படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வேலையற்ற பட்டதாரிகள் நியமனம்

## கவனிக்க வேண்டிய விடயங்கள் குறித்து திட்டவரைவு அரசிடம் சமர்ப்பிக்கப்படும்

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தில் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்த திட்டவரைவொன்றை வேலையற்ற பட்டதாரிகள் அரசாங்கத்திற்கு சமர்பிக்கவுள்ளனர்.

வேலையற்ற பட்டதாரிகளின் கருத்துக்கள் வேலைவாய்ப்பின் போது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என நிதி அமைச்சு உறுதியளித்துள்ள நிலையில் இந்தத் திட்டவரைவு கையளிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சம்மேளனம் அண்மையில் பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித்சியம்பலபிட்டியுடன் நடத்திய பேச்சுவார்தையில் இது தொடர்பான இணக்கம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

260 நிலையங்களில் மூன்று மாதகால தொழிற் பயிற்சி வழங்கப்பட்டு அதன் பின் ஒருவருட காலம் பயிற்சி நிலை ஊழியர்களாகப் பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களுக்குரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் 6000 ரூபா வழங்கப்படவிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தமாத இறுதிக்குள் 30000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கஅரசாங்கம் உறுதியளித்திருந்த போதிலும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் கோரிக்கையினை ஏற்று 35 000 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்க தற்போது அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பட்டதாரிகள் நியமனத்தில் அவர்கள் பட்டம்பெற்ற காலம் கணக்கிலெடுக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது

# பாதிக்கப்பட்ட பட்டதாரிகளை இணைத்து நியமனம் வழங்க யாழ். அரச அதிபர் கோரிக்கை

பட்டதாரிகள் நியமனத்தில் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த பட்டதாரிகளை பட்டியலில் இணைத்து நியமனங்களை மேற்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களப்பணிப்பாளருடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே இவர் இக்கோரிக்கையினை விடுத்துள்ளார். அண்மையில் வெளியிடப்பட்ட பட்டதாரிகள் நியமனப்பட்டியலில், மூப்பினடிப்படையில் பட்டதாரிகள் தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை என்பதையும் சில பிரதேச செயலகப் பிரிவுகளில் எவருமே தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதை பேச்சுக்களின் போது அவர் எடுத்துக்கூறியதாகவும் தெரியவருகின்றது.

இதனிடையே யாழ்.மாவட்டப் பட்டதாரிகள் நியமனத்தில் அரசு மூப்பு அடிப்படையில் நியமனங்களைச் செய்யவில்லை எனவும் இதனைச் சீர்செய்து அனைவருக்குமான நியமனங்கள் வழங்கப் படவேண்டும் எனவும்கோரி யாழ். மாவட்டப் பட்டதாரிகள் சங்கம் யாழ் செயலகத்தின் முன்பாக அண்மையில் மறியல் போராட்டத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## வேடுவர்களுக்கு விசேட அ.அட்டை வழங்க அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையின் ஆதிவாசிகளான வேடுவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படவுள்ளதாக சுற்றாடற்றுறை அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி தெரிவித்துள்ளார்.

மாதுறு ஓயா அல்லது அதனையொட்டிய காட்டுப்பகுதிக்குள் நுளைவதற்கு இந்த அடையாள அட்டை வேடுவர்களுக்கு உதவும் எனவும், இதற்காக அவர்களைப் புகைப்படங்களை பிடிக்கும் நடவடிகக்கை தொடங் கியிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் இவ் அடையாள அட்டைகள் அவர்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். உலக ஆதிவாசிகள் தினத்தையொட்டி அமைச்சர் பௌசி கடந்த வாரம் வேடுவர் சமூகத்தைச் சந்தித்திருந்தார். இதன்போது தாங்கள் இரண்டு வருடங்களுக்கு மிருகங்களை வேட்டையாடுவதில்லை என வேடுவர் சமூகத்தின் தலைவரான "உறுவளிகே வன்னிய எத்தோ" வாக்குறுதியளித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. வேடுவர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்காக மாதுறுஓயாப் பகுதியில் நூறு ஏக்கர் காணிவழங்க அமைச்சர் தீர்மானித்துள்ளதாக ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# கிராமிய அபிவிருத்தி வங்கியின் திருமலைக் கிளை திறப்பு விழா

கிராமிய அபிவிருத்தி வங்கியின் எட்டாவது கிளை நேற்று மு.பகல் 10.00 மணிக்கு திருமலை, கடற்கரைச்சேனை, நாவலடிச்சந்தியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் மங்கல விளக்கினை திருமலை சந்தோசபுரப் பாடசாலை அதிபர். நவரட்ணராமி, இளஞ்சுடர் விவசாய சம்மேளனத் தலைவர் கிருஸ்ண மூர்த்தி, மூதூர் காவல் துறை உதவிப்பொறுப்பாளர் தேவதாஸ் ஆகியோர் ஏற்றினர்.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் ப.சுஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை மூதூர் கோட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி நளினி ஏற்றினார். வங்கியின் பெயர் பலகையினை தளபதி வசந்தன் திரை நீக்கம் செய்துவைத்தார். வங்கிக் கட்டடத்தினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் மதன்ராஜ் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

சிறப்புரையினை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் அவர்கள் ஆற்றியதுடன் வங்கி நடவடிக்கையினை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். திருமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் எழிலன் அவர்கள் வங்கியில் முதலாவது பயனாளிக்குரிய கடனை வழங்கினர். கிராமிய அபிவிருத்தி வங்கியினால் கல்வி வளர்ச்சி நிதி என்ற திட்டத்தின் கீழ் மூன்று மாணவர்கள் முதற் கட்டமாக இந்நிகழ்வில் இணைக்கப்பட்டனர்.

### -ஆங்கில மருந்துக் கடைகளில்

# பிராணிகளைக் கொல்லும் மருந்து விற்பனைக்குத் தடை

(புதுக்குடியிருப்பு)

ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களில் பிராணிகளைக் கொல்லும் மருந்துகளை விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ சுகாதார சேவையின் முல்லை மாவட்ட செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே இவ்வறிவித்தலை அவர்கள் விடுத்துள்ளனர். இவ்வறிவித்தல் நேரடியாகவும் கடிதமூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீறுவோர் மீது கடும் நடவ்டிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (08)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் வீடுகளுக்கு இலக்கமிடும் படையினர்

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க இராணுவ பாதுகாப்பரணிற்கு அப்பாலுள்ள 600 மீற்றர் பகுதியினுள் புதிதாக குடும்பங்கள் எவற்றினையும் மீளக்குடியமர படைத்தரப்பு அனுமதி மறுத்து வருகின்றது.

இதனிடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் இப்பகுதியினுள் இதுவரை மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் வசிக்கும் வீடுகளுக்கு படையினர் இலக்கமிடும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக பன்னாலை மற்றும் அதனை அண்டிய கிராமங்களிலேயே படையினர் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களை இலகுவில் அடையாளங் காணும் நோக்கிலேயே இவ்வாறு இலக்கங்களை இடும் பணியை தாம் ஆரம்பித்துள்ளதாக இலக்கமிடவரும் படையினர் தெரிவித்ததாக அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனினும் இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த நிரந்தர வதிவிடத்தைக்கொண்ட குடும்பங்கள் சில மீளக்குடியமர படைத்தரப்பிடம் விண்ணப்பித்துள்ளதாகவும் ஆயினும் இதுவரை அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லையெனவும் அக்குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும் நிரந்தர வதிவிடத்தை இப்பகுதியினுள் கொண்டுள்ள இடம்பெயர்ந்த மக்களை மட்டும் மீளக்குடியமர தாம் எந்தத் தடையுமின்றி அனுமதிக்கத் தயாராக இருப்பதாக யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி நமக்கு உறுதியளித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (27)

## புலிகளுக்கு....

திறகு எதிர்ப்புத் தெரிவிக்கும் அறிகையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்ற போதும் அதற்கு ஏற்ப உரிய பாதுகாப்பை மேற்கொள்ளாமைக்கு பாதுகாப்புத் தரப்பினரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.(32)

## கட்டாய...

அறிவிப்பார் எனத் தெரிகின்றது. பலவந்தமாகவோ அல்லது கவர்ச்சியாலோ அல்லது வேறு தவறான முறைகளாலோ ஒரு வரை மதம் மாற்றுவதற்கு உதவியளிப்பது இந்தச் சட்டத்தின் கீழ் குற்றமாகின்றது.இத்தகைய குற்றத்தை இழைப்பவருக்கு ஐந்தாண்டுக்கு மேற்படாத சிறை அல்லது ஒன்றரை இலட்சம் ரூபாவுக்கு அதிகப்படாத அபராதம் விதிக்க இச்சட்டமூலம் வகைசெய்கின்றது. (32)

## வீரவணக்கம்...

என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்துள்ளார்.இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்தி உள்ளனர்.

## ஏதென்ஸ் ஒலிம்பிக் -2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 11 | 3 | 1 | 15 |
| அவுஸ்திரேலியா | 6 | 2 | 4 | 12 |
| ஜப்பான் | 4 | 4 | 1 | 6 |
| அமெரிக்கா | 3 | 4 | 5 | 12 |
| பிரான்ஸ் | 2 | 2 | 3 | 7 |
| ரஷ்யா | 1 | 5 | 2 | 8 |
| இத்தாலி | 2 | 2 | 1 | 5 |
| துருக்கி | 2 | 0 | 1 | 3 |
| உக்ரேன் | 2 | 0 | 1 | 3 |
| ஜேர்மனி | 1 | 1 | 1 | 3 |
| ஹங்கேரி | 1 | 1 | 1 | 3 |
| கொரியா | 1 | 0 | 2 | 3 |
| தாய்லாந்து | 1 | 0 | 2 | 3 |
| தென்னாபிரிக்கா | 1 | 0 | 0 | 1 |
| போலந்து | 0 | 2 | 0 | 2 |
| நெதர்லாந்து | 0 | 2 | 3 | 5 |
| ஜோர்ஜியா | 0 | 1 | 0 | 1 |
| கிறீட்பிரிட்டன் | 0 | 1 | 0 | 1 |
| இந்தோனேசியா | 0 | 1 | 0 | 1 |
| போர்த்துக்கல் | 0 | 1 | 0 | 1 |
| சொர்பியா (மெண்டனக்) | 0 | 1 | 0 | 1 |
| சுலோவாக்கியா | 0 | 1 | 1 | 2 |
| பெல்ஜியம் | 0 | 0 | 2 | 2 |

நேற்று நள்ளிரவு வரை 34 நாடுகள் பதக்கங்களை பெற்றிருந்தன.

## ஈ.பி.டி.பி...

துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஈ.பி.டி.பி குழுவின் ஊடகச் செயலாளரான இவர் கடந்த பொதுத் தேர்தலில் அக்கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்திருந்தார்.

இதேவேளை இக்கொலையை அரசாங்கம் கண்டித்துள்ளது. கொழும்பிலும் கிழக்கிலும் சமீபத்தில் நடைபெற்ற படுகொலைகள் சமீபத்தில் டக்ளஸ் தேவானந்தா மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி ஆகியவற்றைப் பட்டியலிட்டு அரசாங்கம் அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது. இதில் கொழும்பில் நடத்தப்பட்ட கொலைகளின் விதத்தையும் இலக்குவைக்கப்பட்ட நபர்களையும் நோக்கும் போது இவற்றில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

## கொழும்பில்....

ஏற்பாடு செய்திருந்தது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டாய மதமாற்றுப் பிரேரணையை நிபந்தனையின்றி விலக்கிக்கொள்ள வேண்டும் எனக்கோரியே இந்தப்போராட்டம் நடத்தப்பட்டது.(32)

## நாட்டுப்பற்றாளர்....

உட்படுத்தப்பட்டாரெனினும் நேற்று முன்தினம் கொழும்பில் காலமாகி விட்டார். அன்னாரது பூதவுடல் இன்று கிளிநொச்சி அரசியல் துறை நடுவப் பணியகத்திலும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலுள்ள சிரான் தொகுதியிலும், அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படவுள்ளது.

திரு. இரத்தினம் அவர்கள் வேலணை உதவி அரச அதிபராக பணிபுரிந்த காலத்திலும், பின்பு கிளிநொச்சியில் சிரான் அமைப்பிலும், சமாதான செயலகத்திலும் இணைப்பாளராகப் பணிபுரிந்த காலத்திலும், தனது இயல்பான தேசப்பற்றின் அர்ப்பணிப்புடன் மனமுவந்து பல முக்கிய பணிகளில் ஈடுபட்டிருந்தார். அவரது அனுபவமும் ஆற்றலும் தேசப் பணிக்கு பெரும் உறுதுணையாக இருந்தது.

எந்நேரமும் இன்முகத்துடன் உலாவந்த இந்த உத்தமர் இளையோருக்கு வழிகாட்டலில் தக்கதொரு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். மும்மொழிகளிலும் நிர்வாகப் பணிகளிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்த இவரது மறைவு நிரப்பமுடியாததொரு இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.

திரு. இரத்தினம் ஐயா அவர்களின் திடீர் மறைவு குறித்து துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் உறவினர், நண்பர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினர் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## தென்னிலங்கை...

புரிந்துகொண்டுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே தமிழ் மக்களின் ஆணையோடு சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தையைத் தொடர, மிகவும் ஆவலாக இருக்கின்றனர் என்பதையும், எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாட்டையும் தெளிவாக முன்வைத்துள்ளோம்.

**கேள்வி:- தொடர்ச்சியாக வெளிநாட்டுப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளை மட்டும் சந்தித்துச்செல்கின்றர். அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அவர்கள் பெறவில்லையா?**

பதில்:-இன்று ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து செல்வது சர்வதேச சமூகத்தின் ஒரு கரிசனையாக உள்ளது. அந்த அடிப்படையில் நாங்கள் எங்களுடைய நிலைப்பாடுகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்வதும் ஒரு நல்ல அறிகுறியாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கேள்வி:- சர்வதேச சமூகம் ஏதாவது அழுத்தத்தை பிரயோகித்துள்ளதா?**

பதில்:- சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. புலிகளுக்கும் அவர்கள் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தருகிறார்கள். மீண்டும் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்கிற அவர்களுடைய ஆலோசனைகளைத் தருகிறார்களேயொழிய அழுத்தத்தை பிரயோகிப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**கேள்வி:- தென்னிலங்கையில் அரசியல் கட்சிகளிடையே இனப் பிரச்சினை தொடர்பாக ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவது பற்றி ஏதும் முன்வைக்கப்பட்டதா?**

பதில்:-அதைத்தான் நாங்கள் இன்று வலியுறுத்தியிருக்கின்றோம். தென்னிலங்கையில் தங்களுடைய அதிகாரத்தை நிலைப்படுத்துவதற்கும், தங்களுடைய அதிகாரப் போட்டிகள் காரணமாகவும் தேசிய இனப்பிரச்சினைச் சிக்கல் இழுத் தடிக்கப்படக் கூடாது.

சமாதான முயற்சிகள் இழுத்தடிக்கப்படுவதால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் தமிழ் மக்கள் இதில் நம்பிக்கை இழந்து விரக்தி அடைந்து கொண்டு செல்கின்றார்கள்.

இது நெருக்கடியான ஒரு கட்டத்திற்குள் தள்ளிவிடும் என்ற அச்சத்தையும் அவர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளோம்.

**கேள்வி:-இதில் ஐரோப்பிய யு,னியன் பிரதிநிதிகள் எந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்?**

பதில்:-அவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எங்களுடைய நிலைப்பாட்டை அறிந்து செல்லும் நோக்கோடுதான் வந்திருக்கிறார்கள். ஆகவே எங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறியுள்ளோம். அவர்கள் எங்கள் நிலைப்பாட்டை அரசாங் கத்திடம் எடுத்துக்கூறுவார்கள் என்று நம்புகின்றேன். அவர்கள் சில கரிசனைகளை வெளிப்படுத்தினார்கள். தற்போது நடக்கின்ற அரசியல் படுகொலைகள் சம்பந்தமாகவும், சிறுவர் நலன்கள் தொடர்பான விடயங்களையும் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது தொடர்பாக நாங்களும் தெளிவான விளக்கத்தைக் கொடுத்திருக்கின்றோம்.

தற்போது யுத்த நிறுத்த உடன்படிக்கை இரண்டரை வருடகாலமாக ஓரளவு நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டு வந்தது. தற்போது குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலே மீண்டும் இந்த ஆயுதக் குழுக்களைச் செயற்பட அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கருணா குழு, மற்றும் ஈ.பி.டி.பி.யுடன் இணைந்த குழுக்கள் மீண்டும் சமாதானச் சூழலை சீர்குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. அவர்களுக்குள் ஏற்பட்ட குழப்பம், முரண்பாடுகள் காரணமாகவே இந்தப்படுகொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதையும் அவர்களுக்குத்தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

ஏனெனில் அந்தக் குழுக்களுக்குள் இருந்து அங்கே தாக்குதல்களில் ஈடுபட்டு, அதிலிருந்து தப்பி வெளியேறிவந்த பலருடைய தகவல்களின் அடிப்படையில் அவர்களுக்கு அதனை ஆதாரப்படுத்தி இருக்கின்றோம். ஆகவே கருணா குழுவும், ஈ.பி.டி.பி.யும் சேர்ந்து இன்று சமாதான சூழ்நிலையைக் குழுப்பி வருகிறார்கள். அதனுடைய பிரதிபலிப்பும் , அவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகளும் தான் இந்தப் படுகொலைகளுக்குக் காரணமாக இருப்பதாக எங்களால் உணரமுடிகின்றது என்பதையும் அவர்களுக்குத் தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

**கேள்வி:-புனரமைப்பு உதவிகள் பற்றி ஏதாவது பேசினீர்களா?**

பதில்:- அது பற்றி நாங்கள் இன்று பேசவில்லை. இச்சந்திப்பில் சமாதானப்பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான சூழ்நிலைகள் பற்றியே நாங்கள் கூடுதலான நேரம் கருத்துக்களைப் பரிமாற்றினோம் என்றார்.

மேற்படி சந்திப்பு நேற்றுப் பகல் 10.30 முதல் நண்பகல் 12.00 மணிவரை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்,விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தைச்சேர்ந்த சுடர்மணி ஜோர்ஜ் ஆகியோரும.

ஐரோப்பிய யூனியன் தலைவா றொய்க்காவுடன் நெதர்லாந்துத் தூதுவர் சுசான் பிளாங்காட், பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீவன் எவான்ட்ஸ், ஐரோப்பிய ஆணைக் குழுவின் விவகார அதிகாரி வவுட்டர் வில்டன்ஆகியோர் கலந்து கொண்டனர்.

தரைவழிப்பாதையூடாக கிளிநொச்சி வந்த மேற்படி குழுவினருக்கான பாதுகாப்பு நடவடிக்கையினை புளியங்குளத்திலிருந்து கிளிநொச்சிவரை தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(சோ,கு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 17 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.